Registered as a News Paper    பக்கங்கள் 08    விலை ரூபா: 6.00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம்:- 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    வைகாசி 09    (22 - 05 - 1992)    வெள்ளிக்கிழமை    ஓசை: 94

## விடியலின் பாடல்கள்

"விடியலின் பாடல்கள்" என்னும் புதிய ஒலிப் பதிவு நாடா வெளியீட்டு வைபவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடை பெறவுள்ளது. விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் யாழ். மாவட்ட இசைக்கலைஞர்களை ஒருங்கிணைத்து இந்த ஒலிப்பதிவு நாடாவைத் தயாரித்துள்ளது. யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி தலைமையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்தில் யாழ். மாவட்டத்தளபதி செல்வராஜா, திரு.யோகரத்தினம் யோகி செல்வி ஜெயா [விடுதலைப் (8 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னியில் இரு தாக்குதல்கள்

# 8 ராணுவம் பலி: பலர் காயம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலும், மணலாற்றிலும் நேற்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இரு வேறுதாக்குதல்களில் எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர். எட்டு நவீன ரகத் துப்பாக்கிகளும் பெருமளவு வெடிப்பொருள்களும் இராணுவ உபகரணங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

விடுதலைப்புலிகள் தரப்பில் இரண்டு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

## மன்னாரில் புலிகள் அதிரடி தாக்கு; 6 படையினர் பலி; பலர் படுகாயம்

(மன்னார்)

மன்னார் நறுவிலிக்குள மாதிரிக்கிராம இராணுவ முகாமிலிருந்து வெளியேறி வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் கொல்லப் பட்டனர்.

இச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, நேற்று அதிகாலை 5.25 மணியளவில் நறுவிலிக்குள மாதிரிக்கிராமம் இராணுவ முகாமிலிருந்து 15 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் துப்பரவு செய்து கொண்டு 200 யார் தூரத்திற்கு முன்னேறினர். அப்போது இவர்கள் மீது விடுதலைப் புலிகள் அதிரடி தாக்குதலொன்றை மேற்கொண்டனர். இத்தாக்குதலின் போது ஆறு இராணுவத்தினர் பலியாகினர் ஏனையோர் காயங்களுடன் தப்பியோடி விட்டனர்.

இராணுவத்தினரிடமிருந்து நவீனரக ஆயுதங்களும் இராணுவ உபகரணங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

### கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(மன்னார்)

மன்னார்நறுவிலிக்குள இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்:

- ★ மினிமினி எல்.எம் ஜி - 01
- ★ ரி 56-2 ரக துப்பாக்கி - 02
- ★ ரி-56-1 ரக துப்பாக்கி - 02
- ★ ரி-81-1 ரக துப்பாக்கி - 01
- ★ 5.56ரவைவிக்குடன் - 1051
- ★ நடுத்தர ரவைகள் - 413
- ★ ஜே.ஆர் கைக்குண்டு - 09
- ★ ரி-56 மகசீன் - 12
- ★ ரி-81 மகசீன் - 02
- ★ ஏ.கே. கோல்சர் - 06
- ★ தண்ணீர்க்கான் - 04
- ★ இராணுவ பெல்ற் - 04
- ★ சப்பாத்து - 04 சோடி
- ★ மழைக்கோட்டு - 03
- ★ தலைக்கவசம் - 03
- ★ தொப்பி - 01

## மணலாற்றில் காவலரண் தகர்ப்பு 2 இராணுவம் பலி; பலர் காயம்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் உள்ள சிறிலங்கா இராணுவ முகாம் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் அதிவேக அதிரடித் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். இத்தாக்குதலின் போது இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

நேற்றுஅதிகாலை 5.50மணியளவில் மணலாறு மாவட்டத்தில் அமைந்துள்ள பாரிய இராணுவமுகாமான சிலோன் தியேட்டர் முகாமிற்கும் முந்திரிகைக்குள முகாமிற்கும் இடையில் சிலோன் தியேட்டர் முகாமிலிருந்து 300 யார் தூரத்திலிருந்த காவலரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் அதிவேக அதிரடித் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். இரண்டு நிமிடநேர தாக்குதலில் இக்காவலரண் கைப்பற்றப்பட்டது.

இத்தாக்குதலில் 02 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோா காயங்களுடன் ஓடிவிட்டனர். பெருமளவு ஆயுதங்களும் இராணுவ தளபாடங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டன.

விடுதலைப்புலிகள் தரப்பில் இரண்டு போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டனர்.

### கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

மணலாற்றில் நேற்று இராணுவ காவலரண் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின்விபரம்வருமாறு:

- ★ ஏ கே எல்.எம் ஜி - 01
- ★ அதற்குரியரம்மகசின் - 01
- ★ ரி - 56 புதிய ரக துப்பாக்கி - 01
- ★ ரி - 56 மகசின் - 08
- ★ நடுத்தர ரவைகள் - 536
- ★ ஏ.கே.எல்.எம்.ஜி லிங்குகள் - 500
- ★ ஜே.ஆர் கைக்குண்டு - 03
- ★ குண்டு துளைக்காத உடை - 02
- ★ தலைக்கவசம் - 02
- ★ சப்பாத்து - 02 சோடி
- ★ இராணுவ பெல்ட் - 02
- ★ கிட் பாக் - 01

## வீரச்சாவு

### வீரவேங்கைகள் நிலான், தங்கநேசன்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வலிநுகரை வெலிக்குளம் என்னுமிடத்திற்கு விடுதலைப் புலிகள் இயக்க வேலை காரணமாகச் சென்று திரும்பிய போது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கினர்.

இம்மாதம் 15 ஆம் திகதி இடம் பெற்ற இத் தாக்குதலினால் இரண்டு விடுதலைப் புலிகள்வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். வீரச்சாவைத் தழுவிக் கொண்டவீரவேங்கை நிலான் (வைத்தியலிங்கம் ஜெயகாந்தன் கொம்மாந்துறை, மட்டக்களப்பு), (8ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் தடை விவகாரம்

## கடுமையான நடவடிக்கை; அரசாங்கம் விரும்பவில்லை

\- டி. பி. விஜயதுங்கா

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக் குழு தனது தீர்வுத்திட்டத்தைச் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படும் இந்தநேரத்தில் சம்பந்தப்பட்ட விடயங்களைப்பற்றி முன்முடிவுகளை எடுக்கவோ அல்லது கடுமையானஒரு தலைப்பட்சநடவடிக்கைகளை எடுக்கவோ அரசாங் [8 ஆம் பக்கம் பார்க்க)

## 'சார்க்' ஒப்பந்தப்படி சிறிலங்கா நடக்கும்

\- ரணில்

(வாஷிங்டன்)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தொடர்புபடுத்திக் குற்றம் சாட்டப்பட்ட இலங்கைத் தமிழ் போராளிகளை விசாரணைக்காக இந்தியாவுக்கு அனுப்பும் விஷயத்தில் தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பு (சார்க்) மற்றும் பொதுநலவாய உடன்படிக்கைகளின்படி தமது நாடு நடந்து கொள்ளுமென்று கைத்தொழில் அமைச்சர் [8 ஆம் பக்கம் பார்க்க]

## இனப்பிரச்சினை தீர்வுக்கு இணைந்தசெயற்பாடுதேவை

\- அத்தாவுட

(இராகலை)

இனப்பிரச்சினையின் தீர்வில் ஐக்கிய தேசியக்கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி இருகட்சிகளும் இணைந்த செயற்பாடு தேவை. இதன் மூலமே இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்பதை நாம் வலியுறுத்தி வந்துள்ளோம்.

இவ்வாறு உடப்புசலாவையில் இலங்கை விவசாய கிராமியத் தொழிலாளர் காங்கிரஸ் ஒழுங்கு செய்திருந்த பொதுக் கூட்டமொன்றில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டுஉரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் அத்தா (8 ஆம் பக்கம் பார்க்க]

## மணலாற்றில் வீரச்சாவு

மணலாற்றில் நேற்று இடம் பெற்ற அதிவேக அதிரடித் தாக்குதலின் போது இரண்டு வீரவேங்கைகள் களப்பலியாகினர். இத்தாக்குதலில் வீரச்சாவை தழுவிக்கொண்ட கப்டன் குட்டிமணி (அலோசியஸ் -தங்கடபன் உதயகுமார் மகிழூர் முனை களுவாஞ்சிக்குடி மட்டக்களப்பு) லெப்டினன் செங்கோன் (குணாளன்-தங்கராசா சிவகுமார் நெல்லி சேடை அல்வாய் வடக்கு அல்வாய்) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



கப்டன் குட்டிமணி



லெப்.செங்கோன்

## மிளகாய்ச் செய்கை பாதிப்பு

(வவுனியா)

தொடர்ச்சியான மழைகாரணமாக வவுனியாப் பகுதியில் மிளகாய்த் தோட்டங்கள் பாதிப்படைந்துள்ளன.

கடந்த சில தினங்களாக வவுனியாவில் கடும் மழை பெய்து வருகிறது. இதனால் வேர் அழுகிய பல மிளகாய்ச் செடிகள் அழிந்து போய் விட்டன.

இந்த வருடம் வன்னிப்பகுதிகளில் மிளகாய்ப் பயிர்ச் செய்கை அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## விண்ணப்பிக்க வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தீவக இடம் பெயர்ந்தோர்க்கான விளையாட்டு விழா நடாத்துவதற்கான ஆலோசனைக்கூட்டம் நேற்றுமுன்தினம் யாழ் செயலகத்தில விளையாட்டுக் குழுத் தலைவரினால் கூட்டப்பட்டது.

இக் கூட்டத்தில் ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் இணைந்து மேற்படி விளையாட்டு விழாவை நடாத்துவது என தீர்மானிக்கப் பட்டது; மற்றும் குழுப்போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம் 31 ஆம் திகதி எனவும் மெய்வல்லுனர் போட்டிக்கான முடிவுத்திகதி அடுத்த மாதம் 5 ஆம் திகதி எனவும் முடிவு எடுக்கப்பட்டது. இவ்விளையாட்டுப்போட்டியில பங்குபற்றும் கழகங்கள் தங்கள் பகுதி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப் படுகின்றனர்

மேற்படி கூட்டத்தில் இரு பிரிவு உதவி அரசஅதிபர்களும் தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி விளையாட்டுப் பொறுப்பாளர், விளையாட்டு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (பா)

## இந்தியா

சக்திகளை உற்சாகப் படுத்தும ஒரு ஒரு செய்தி. இதன் மூலம் இலங்கைத்தீவில் இந்தியாவினுடையது அல்லாத சமாதானம் ஒன்றை உருவாக்கக்கூடிய இரு பிரதான சக்திகளையும் தொடர்ந்து பகை நிலையிலேயே வைத்திருக்க புதுடில்லி விரும்புகிறதா?

## விழுதுகள்

சிறிலங்கா இராணுவத்தினருடனான போர் மீண்டும் தொடங்கியவுடன் இவன் கல்முனைப் பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல் தொடுத்தான். அந்நிலையில் அங்கு வம்பளந்து கொண்டிருந்த முஸ்லீம்கள் "இவனுகள் பொலிசைத்தான் அடிக்கமுடியும் நமமட ஆமியை அசைக்க முடியுமா?" என்று கேட்டனர். இதற்கு இவன் வாயால் பதில் சொல்லவில்லை அன்று நிகழ்ந்த இராணுவ முகாம் மீதான தாக்குதலே இவனது பதிலாக அமைந்தது. இவனது தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில இராணுவத்தினர் கடல் வழியாக தப்பிச் சென்றனர். இராணுவத்தினரின் சடலங்கள் கடலில மிதந்தன. அத்துடன் அம்பாறை மாவட்டத்தில் ஏனைய இடங்களில் தாக்குதல் நடத்தி சிறிலங்கா இராணுவத்தினரை மகாஓயாவரை துரத்தி அடித்தவன் இவன்.

'சிரித்துக்கொண்டே செருக்களம்வாடா' என்ற காசிஆனந்தனின் பாடல் வரிகளை பின்பற்றும் இவனது வீரச்சாவு 28-10-1990 அன்று நிகழ்ந்தது. 5 இராணுவத்தினர் கொல்லப்பட்ட அத்தாக்குதலின் ஆரம்பத்திலேயே இவனது வீரச் சாவு நிகழ்ந்து விட்டது

இவனுக்கு அஞ்சலி செலுத்தவந்த மக்கள் கூட்டத்தைப் போல வேறெந்த மக்கள் கூட்டத்தையும் மட்டக்களப்புமண் காணவில்லை அது அன்று இந்திய இராணுவ அதிகாரியை நோக்கி இவன் கேட்ட கேள்வியை திரும்பக் கேட்டது.

## அரச வங்கிகளுக்கு சுயாதிபத்திய உரிமை

(கொழும்பு)

சர்வதேச வங்கிகளின் தரத்திற்கு கொண்டு வருவதற்காக அரசாங்க வங்கிகளுக்கு சுயஆதிபத்திய உரிமைகள் வழங்கப்பட விருப்பதாக தெரியவருகின்றது.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றை சர்வதேச தரத்திற்கு கொண்டு வருவதற்காக மீளமைப்பு செய்வதற்கான அரசாங்கத்தின் முடிவு சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கும், நிதி அமைச்சின் கீழுள்ள கூட்டுத்தாபனங்கள் திணைக்களங்களின் அதிகாரிகள், செயலாளர்கள் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டிருப்பதாக திறைசேரி செயலாளர் பாஸ்கரலிங்கம் கூறியுள்ளார்.

## உணவுமுத்திரைக்கு வழங்க பழுதடைந்த உணவுகள்

(வவுனியா)

வவுனியாவில் உணவுமுத்திரை மற்றும் பாடசாலை மதியஉணவுக்கு வழங்கப்படும் அரிசி பழுதடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் பாவனைக்கு உதவாத பழுதடைந்த உணவு கூட்டுறவுக் கடைகளில் வழங்கப்படுவது இது இரண்டாவது முறையாகும்.

180 மெற்றிக் தொன் பழுதடைந்த அரிசி வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது


சஸ்தூரியின் ஆக்கங்கள்

### நூல் வெளியீட்டு விழா

இடம் :
யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கம்

காலம் :
23 - 05 - 1992 சனிக்கிழமை காலை 9.30 மணி

தலைமையுரை : செல்வி ஜெயா
மங்கள விளக்கேற்றல்: கஸ்தூரியின் பெற்றோர்
வரவேற்புரை : செல்வி ஆர்த்தி
வெளியிட்டுவைப்பவர்: திருமதி.அடேல்பாலசிங்கம்
வெளியீட்டுரை: திரு. புதுவை இரத்தினதுரை
ஆய்வுரை வழங்குவோர் :
1. செல்வி மாலினி 4. பேராசிரியர் அ.சண்முகதாஸ்
2. செல்வி பாரதி 5. யோகரத்தினம் யோகி
3. திருமதி அ. மன்கிளி முருகதாஸ்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி

வெளியீட்டுவிழா முடிவில் விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் 'சந்தனக்காடு' நாடகம் இடம்பெறும். (2587)



எம் மண்ணின் உற்பத்திகளான

### பனைவெல்லம் பனஞ் சீனி

என்பவற்றிற்கு தேசிய உணர்வுடனான சகலரதும் ஆதரவைக் கோருகின்றோம்.

வடமாகாணத்தில் உள்ள எமது சகல அங்கத்துவ சங்கங்களிலும், பின்வரும் நிலையங்களிலும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

வெல்லம் கிலோ. ரூபா. 40/-

சீனி கிலோ. ரூபா. 40/-

மொத்த வியாபாரிகளுக்குக் கழிவு உண்டு.

★ யாழ்ப்பாணம் — 222 ஸ்ரான்லி வீதி சந்தைப்படுத்தல் பிரிவின் காட்சியறை
★ யாழ்ப்பாணம் — பல்பொருள் அங்காடி - ஓட்டுமடம்
★ அரியாலை — பல்பொருள் அங்காடி - மாம்பழம் சந்தி.
★ சுண்டிக்குழி — ,, ,, - மகளிர் கல்லூரி முன்.
★ கோப்பாய்—தெ.ப.பொ.கூ. சங்கம்—பருத்தித்துறை வீதி.
★ நல்லூர் — பல்பொருள் அங்காடி - வீரமாகாளி அம்மன் கோயிலடி.
★ சாவகச்சேரி — 'புற்பதி' பஸ் நிலையம்.
★ கொடிகாமம் — சேவை நிலையம் - கச்சாய் வீதி.
★ பளை — கற்பக விற்பனை நிலையம்.
★ தெல்லிப்பளை—மக்கள் சேவைநிலையம், துர்க்காபுரம்
★ சுன்னாகம்—கற்பகதரு பிரதான வீதி, சுன்னாகம் சந்தி
★ மானிப்பாய் — மக்கள் சேவை நிலையம், ஆஸ்பத்திரி முன்பாக.
★ சங்கானை — மக்கள் சேவை நிலையம், சந்தையடி.
★ பண்டத்தரிப்பு — பல்பொருள் அங்காடி, மத்தியசந்தை.
★ கோண்டாவில் — யாழ். பல்கலைக்கழக மகளிர் உணவகம் ஆனந்தக் குமாரசாமி விடுதி கற்பகாமிர்தம் (தொழில் நுட்பக் கல்லூரி அருகாமை)

வட மாகாண தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச சந்தைப்படுத்தல் பிரிவு.
222, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(சி/4448)


## விடுமுறை தினங்கள்; வர்த்தகர் சங்கம் அறிவிப்பு

யாழ். மாவட்டத்திலுள்ள வர்த்தக சங்கங்கள், வர்த்தக ஊழியர் சங்கங்கள் இணைந்து பின்வரும் தினங்களை வர்த்தக விடுமுறை நாட்களாகப் பிரகடனப்படுத்தியுள்ளன.

சனிக்கிழமை பி.ப. 2.00 மணியிலிருந்து அரை நாள் விடுமுறை நாளாகவும், ஞாயிற்றுக்கிழமை முழுநாள் விடுமுறை நாளாகவும் கருதி நகரங்களிலும், பட்டினங்களிலும் உள்ள கடைகளை மூடுவதெனவும், கிராமங்களிலும் புற நகரப் பகுதிகளிலுமுள்ள சிறிய முதலீட்டுடனான வெற்றிலைக்கடைகள், மரக்கறிக் கடைகள், பழக்கடைகள் முதலியவற்றை அவ்வப் பிரதேச வர்த்தக சங்கங்கள் இனங்கண்டு சனி ஞாயிற்றுக் கிழமைகளில் அவற்றைத் திறந்து வியாபாரம் செய்வதற்கான அனுமதியை வழங்குவது என்றுமமுடிவு செய்யப் பட்டது

மேலும் பின்வரும் நாட்களை விடுமுறை நாட்களாகப் பிரகடனப்படுத்தி வர்த்தக நிலையங்களை மூடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

தைப்பொங்கல் மகா சிவராத்திரிக்கு அடுத்த நாள், அனைத்துலக மகளிர் தினம்- மார்ச் 08-ம் திகதி சித்திரை புது வருடம், பெரியவெள்ளி, அன்னை பூபதி நினைவு நாள்- ஏப்பிரல் 19-ம் திகதி, மே நாள் சித்திரைப் பௌர்ணமி, ஆடிப் பிறப்பு, கரும்புலிகள் தினம் - யூலை 05 ம் திகதி, ஆடி அமாவாசை, முத்தமிழ்விழா இறுதி நாள், நல்லூர்த் தேர் அல்லது அவ்வப் பிரதேச வணக்கத் தலங்களின் முக்கிய நாள், திலீபன் நினைவு நாள் செப்டெம்பர் 26.ம் திகதி. புரட்டாதிச் சனி, குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகள் நினைவு நாள்- ஒக்டோபர் 05-ம் திகதி. தமிழீழ இந்தியப் போரின் ஆரம்ப நாள் - ஒக்டோபர் 10 - ம் திகதி, தீபாவளி சூரன் போர், மாவீரர் நாள்- நவம்பர் 27ம் திகதி, நத்தார் பண்டிகை,


### ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கு
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4.00, 6.00 மணி
காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றது.

### Freedom Forces

(இந்தோனேசிய விடுதலைப் படை)

(சி/4449)


## நினைவு கூருகின்றோம்--- 1992-05-22

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் வவுனியா தாண்டிக்குளம் பகுதியிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட - மன்னார், மடுவைச் சேர்ந்த - தமிழ்ப் பொதுமகன்.

1988 ஆம் ஆண்டு கந்தரோடையில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது, விழுப்புண் அடைந்த நிலையில தன்னைத்தானே சுட்டு வீரச்சாவெய்திய -

**லெப். எட்றிச்/வெள்ளை** (சுந்தரம் கனகசுந்தரலிங்கம் - வெள்ளைவீதி, சுன்னாகம்தெற்கு)

1989 ஆம் ஆண்டு மணலாறு / நெடுங்கேணி, ஆயிலடிப் பகுதியில், இந்தியப் படையினர் - மற்றும் தேசவிரோத சக்திகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**அகிலன்** (சுப்பிரமணியம் நாகேந்திரன் - ஆயிலடி, நெடுங்கேணி, மணலாறு)

மந்துவிலில், இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**பைக்பைக்/செந்தில்** (கனகரத்தினம் சிறிகாந்தன் - பெரும்குளம் பிள்ளையார்கோயிலடி சாவகச்சேரி)

யாழ் கரவெட்டி, கப்புது வெளிப்பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலின் போது, வீரச்சாவெய்திய -

**அருள்** (யாக்கோப்பெஞ்சமின் வில்லியம்ஜீவஅருள்தாஸ் - உச்சில் ஒழுங்கை, கரவெட்டி, யாழ்)

இதே மோதலின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**வள்ளுவன்** (த. ரவிநாதன் - மத்தொனி, கரவெட்டி, யாழ்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4445)




"கண்ணனா .... அவன் சாவீட்டிலயும் சிரிப்பான், கலியாண வீட்டிலயும் சிரிப்பான்" என்று கூறுவார்கள் மட்டக்களப்பு மக்கள். எந்த நிலையிலும் தளர்ந்து போகாத அவனது இயல்பை விளக்க வேறு வார்த்தைகள் தேவையில்லை. வெளிப் பார்வைக்கு அப்படித் தெரிந்தாலும் உள்ளே அவனது மனம் குமுறிக் கொண்டிருந்தது. வீரச்சாவைத் தழுவிக் கொண்ட நண்பர்களின் உடல்களைத் தாண்டிச் சென்று கைப்பற்றிய ஆயுதங்களைக் கையளிக்க நேர்ந்தமை, திலீபனின் மரணம் போன்ற சம்பவங்களினால் வேதனை அடைந்திருந்த அவனுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்று குமரப்பாவின் மரணம் பற்றிய செய்தி கிடைத்தது. குமரப்பா தளபதியாகவிருந்து தன்னை வழி நடத்திய காட்சிகளை நினைத்துக் கொண்டான். சுற்றிவளைப்புகளால் அசைக்க முடியாத குமரப்பா சூழ்ச்சிக்குப் பலியானதை நினைக்கும்போது அவனால் தாங்க முடியவில்லை. எனினும் தொடர்ந்து கிடைத்த செய்தி அவனது மனக்கொதிப்பை அடக்கியது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திட்ட தினத்திலிருந்து யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்குமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதனால் எதுவும் செய்ய முடியாத நிலைமையிருந்தது. இப்போதுதான் மீண்டும் சண்டையிட அனுமதி கிடைத்துள்ளது. அதுபோதும் அவனுக்கு. அதற்கான முன்னேற்பாட்டைச் செய்வதற்காகச் சென்ற காந்தனுடன் அவனும் இணைந்து கொண்டான். இருவருமாக வானில் செங்கலடியை நோக்கி விரைந்து வந்த போது, இந்தியப் படையினரால் வழிமறிக்கப்பட்டனர். "எல். ரீ... ரீ யா?, என்ன பெயர்?" என்ற கேள்விகளிலிருந்து வேகமாக வந்ததற்கான காரணம் வரை அவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டியிருந்தது. சிலர் வானைச் சோதித்துக் கொண்டிருந்தனர். வானுக்குள் இரு டிற்றினேற்றர்கள் இருப்பது அவனுக்கு ஞாபகம் வந்தது. அவர்கள் தொடர்ந்து கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார்கள். நிலைமை பாதகமாக இருந்தது. எனவே இவன் காந்தனிடம் சொன்னான், "இவனுகள் கதைக்கிறதைப் பார்த்தா கொண்டு போகப் போறானுகள் போல இருக்கு. தங்களுக்குப் பின்னால வானோட நம்மள வரச் சொன்னா பிரச்சினையில்லை; நான் வெட்டி ஓடுவன். அப்படியில்லாம தங்களோட வரச் சொன்னா அடிச்சுப் போட்டுக் கிளம்புவம்."

ஆனால் எதிர்பார்த்தபடி எதுவும் நிகழவில்லை. டிற்றினேற்றரை நசித்துப் பார்த்த ஒரு இந்திய இராணுவத்தினன் அதனைப் பழைய இடத்திலேயே வைத்தான் இந்தியப் படையினர் விலகிச் சென்று விட்டனர்.

மீனவக் குடியேற்றம் என்ற பெயரில் புன்னைக்குடாவில் குடியேறிய சிங்களவர்கள் இருக்கும் இடத்திற்கு சிறிலங்காப்படையினர் வருவார்கள் எந்த இடத்தில் அவர்களை எதிர்த்து தாக்குதலை நடத்தலாம் என்று சிந்தித்துக் கொண்டிருக்கையில் தான் மூன்று ஜீப்புக்கள் வருவதை அவதானித்தார்கள். முன்னேயும் பின்னேயும் இந்திய இராணுவத்தினர் - நடுவில் சிறிலங்காவின் விசேட அதிரடிப்படையினர் அவர்களுக்கு மத்தியில் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பதிகாரியான நிமால் டிசில்வா காணப்பட்டார். இனியும் தாமதிக்க நேரமில்லை. அவர்கள் திரும்பி வருவதற்கிடையில் தாக்குதல் நடாத்த வேண்டும். நிமால்டி சில்வா கொக்கட்டிச்சோலையில் நூற்றுக்கணக்கானோரைப் படுகொலை செய்தவன் செறண்டிப் இறால் வளர்ப்புத்திட்டத்தினுள் தொழிலாளர்களை வரிசையாக நிற்கவைத்துச் சுட்டவன். அத்தனை பேரும் இறால் தொழிலில் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள். இன அழிப்புடன் பொருளாதார அழிப்பையும் கவனத்திற் கொண்டே இப்படுகொலை நிகழ்த்தப்பட்டது. ஆகையால் இவனைப் பழிவாங்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தவர்களுக்கு இப்படியொரு சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. எப்படித் தாக்குதலை நடத்தலாம் என்று சிந்தித்துக் கொண்டிருந்த போது வழியில் பொச்சுமட்டை ஏற்றிய மாட்டு வண்டியொன்று வந்தது தற்போதைக்கு இதைவிட சிறந்த மார்க்கமில்லை மாட்டுவண்டியிலிருந்த பொச்சு மட்டைகள் இறக்கப்பட்டு அவசர அவசரமாக வெடிமருந்து நிரம்பிய "கான்கள்" வைக்கப்பட்டன. இந்தியப்படையினர் நசித்துப் பார்த்து விட்டுப் போன டிற்றினேற்றரும் இருந்தது. அதையும் இதனுடன் இணைத்து எக்ஸ்புளோடருடன் தொடுத்து விட்டனர். பொச்சு மட்டையால் "கான்கள்" உருமறைப்புச்செய்யப்பட்டன.

டிசான், அகத்தியர், கண்ணன், மூவருமே தங்களுக்குத்தான் அதனை வெடிக்கவைக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென சண்டை பிடித்தனர்.. முடிவில் அகத்தியருக்கு அந்தச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. மிகவேகமாக வந்த அந்த ஜீப்களில் நடுவில் வருவதே சிறிலங்காப் படையினருடையது என்பதை டிசான் வாக்கி-டோக்கிமூலம் உறுதிப்படுத்தினான். நிமால் டி. சில்வா உட்பட அந்த ஜீப்பில் வந்த அனைவருமே பலியாகினர். பின்னால் சென்ற இந்திய ஜீப் ஒரு மரத்துடன் முட்டி மோதி நின்றது,



மேஜர் கண்ணன்

"குமரப்பா விழுந்ததுக்கு பதிலடி அடிச்சிருக்கிறம் - மட்டக்களப்பு மாவட்ட இணைப்பதிகாரியின் மரணம் மூலமாக" என்ற செய்தியை அனுப்பினர். குமரப்பாவால் உருவாக்கப்பட்ட போராளிகள். கொக்கட்டிச்சோலை படுகொலைகள் பற்றி நினைக்கையில் கொதித்த ஆத்திரமும் அன்றுதான் அடங்கியது.

பகல் 11,50க்கு தாக்குதல் நடந்தது. ஒவ்வொரு சடலமும் ஒவ்வொரு ட்றக்கிலாக ஏற்றி முடிக்கையில் பி.ப. 5.30 மணியாகி விட்டது. பொதுமக்களுடன் பொது மக்களாக கலந்திருந்து சடலங்களை ட்றக்குகளில் ஏற்றுவதைப் பார்த்துக்கொண்டிருந்தனர் கண்ணனும் அவனது நண்பர்களும். அப்போதுதான் அவன் அவதானித்தான் அவனையும் காந்தனையும் இனங்கண்ட இந்தியப்படை அதிகாரியும் அங்கிருக்கிறான் என்பதை. மெதுவாக காந்தனிடம் விஷயத்தைக் கூறினான். அனைவரும் அங்கிருந்து நழுவினர். இவர்கள் தான் தாக்குதலை நடத்தியவர்கள் என்பது அங்கிருந்த பொதுமக்கள் அனைவருக்கும் தெரியும். எதிரே சிறிலங்காப் படையினரும் இந்திய இராணுவத்தினரும் நிற்கின்றனர் ஆனாலும் எவரும் காட்டிக்கொடுக்கப்போவதில்லை என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது. அதுதான் புலிகளின் பலம். எல்லா இயக்கமும் இந்தியப் படையினருடன் நின்றபோது புலிகள் மக்களின் பக்கம் நின்றனர் இதை இந்தியப் படையினருக்கு உணர்த்தும் சந்தர்ப்பம் கண்ணனுக்கு கிடைக்கத்தான் செய்தது.

இந்தியப் படையினருடனான போரில் அவர்களுக்கு பாரிய சேதத்தினை ஏற்படுத்திக் கொண்டிருந்தான் கண்ணன். தன்னாமுனையில் நிகழ்ந்த தாக்குதல் உட்பட பல தாக்குதல்கள் அவனது பெயரை உச்சரிக்க வைத்தன. கண்ணனின் தாக்குதலால் பலியாகிவரும் தமது சகாக்களின் சடலங்களைத் தான் காண முடிந்ததேதவிர கண்ணனைக் காணமுடியவில்லை இந்தியப் படையினரால் இந்த நிலையில் தாங்கள் அறிவித்திருந்த யுத்த நிறுத்த காலப்பகுதியில் கண்ணனுடன் பேசவிரும்புவதாக தெரிவித்தனர். கிறிஸ்தவ மதகுரு ஒருவர் மூலமாக இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

உண்மையில் பேசுவது தான் அவர்களது நோக்கமல்ல கண்ணனை இனங்காணுவதே அவர்களதுபிரதான நோக்கம். ஏற்கனவே பேச்சுவார்த்தைக்கென அழைக்கப்பட்ட டேவிட் போன்றோருக்கு நடந்தது என்ன வென்பதும் அவனுக்குத் தெரியும். ஆனால் இதற்கெல்லாம் அவன் அஞ்சவில்லை. செங்கலடியில் அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. ஒரு கட்டத்தில் இந்தியப் படை அதிகாரி சொன்னார் "உங்களுக்கு மக்கள் செல்வாக்கு இல்லை" ..." கண்ணன் சிரித்தபடியே கேட்டான்: "மக்கள் செல்வாக்கு இல்லாமலா நான் உங்களோட இந்த இடத்தில் நிண்டு கதைக்க முடியுது?" இதற்கு மேல் அந்த அதிகாரியால் பேசமுடியவில்லை.

ஒரு நாள் கொம்மாதுறைத் தீவு என்ற இடத்தில் இவனும் ஜோன் என்ற போராளியும் தங்கியிருந்தனர். அந்த இடம் இந்தியப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டது. தப்பமுடியாத சூழ்நிலை முற்றிலும் பிரப்பம் பற்றைகள் இவன் பிரப்பம் பற்றைக்குள் நுழைந்தான். கையில் பிஸ்ரலுடன் நுழையும் போது அதன் மகஸீன் கீழே விழுந்து விட்டது. அது இந்த வழியால் தான் இவன் சென்றிருக்கிறான் என்பதை இந்தியப்படையினருக்கு இனங்காட்டியது அவர்களால் பிரப்பம் பற்றைக்குள் நுழைய முடியவில்லை தமது முயற்சியைக் கைவிட்டனர் இவனது உடம்பில் பிரப்பை கிழியாத இடமேயில்லை. பிரப்பை முட்களுக்குள் இவன் உடுத்திருந்த சாறத்தையும் இழந்து விட்டான். எனினும் வழியில் அவனுக்கு தெரிந்த குடும்பத்தவர் ஒரு சாறம் கொடுத்து அனுப்பி வைத்தனர். இரவு 8.00 மணிக்கு கொம்மாதுறை தீவிலிருந்து தப்பியவன் பகல் 8.00 மணிக்குத்தான் தம்பாலம் வெளிப்பகுதிக்கு செல்ல முடிந்தது. அதுவரை அவன் சாப்பிடவில்லை — சாப்பாடும் இல்லை பணமும் இல்லை மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க பணக்காரர்களில் ஒருவரான செல்லையா போடியாரின் மகனுக்கு இந்த நிலைமை.

மட்டக்களப்பு மாவட்ட மக்களின் வாயில் இல்லை என்ற சொல்வருவதே அபூர்வம். இவனுக்கு சாப்பிடக் கொடுப்பதற்கு எதுவுமே இல்லையே என்று நினைத்த ஒரு ஆதரவாளர் அதை வெளியில் சொல்லாமல் கொஞ்சம் இருங்கோ வாறன் என்று சொல்லிவிட்டு ஆற்றில் இறங்கினார் தூண்டில் போட்டு மீன் பிடித்து அதையே உணவாகக் கொடுத்தார். இது தான் இந்தப் போராட்டம் பற்றிய யதார்த்த நிலைமை புலிகள் சமுத்திரத்தில் உள்ள மீன்களைப் போன்றவர்கள் என்று குறிப்பிடப்படுவது இதனால்த்தான்.

எப்படியோ தம்பாலம் வெளியும் முற்றுகையிடப்பட்டது. அங்கு இருந்தவர்களில் இவனுக்குத்தான் ஒழுங்காக தோணி வலிக்கத்தெரியும். இவனது கை காலெல்லாம் பிரப்பை முள் கீறியதால் வீங்கிப் போயிருந்தன. அந்நிலையிலும் இவன் தோணியை வலிக்க முன்வந்தான் "என்னால இயண்டவரை கொண்டு போவன்" என்றான் தம்பாலம்வெளியிலிருந்துமகிழவெட்டுவான் வரை சுமார் 3 மைல் தூரம் தோணியை வலித்துக் கொண்டு சென்றான். இந்த நிலையில் இவன் தோணி வலிப்பதைக்காண ஏனையோருக்கு வேதனையாகத் தான் இருந்தது ஆனாலும் வேறு வழியில்லை அந்த முற்றுகையில் அகப்பட்டோர்காப்பாற்றப்பட்டது இவனது மனத்துணிவினால்தான்.

(2-ம் பக்கம் பார்க்க)

# கொடியரசு நாளாக மே - 22

இருபதுவருடங்கள் அதற்குள் உருண்டோடி விட்டது. கொடிய நாள் இது சிறிலங்கா சோசலிசஜனநாயகக்குடியரசு என்று இலங்கை தன் பெயரை மாற்றிக்கொண்ட நாள் இது.

பிரிட்டனின் மகாராணியாரால் நியமனம் பெறும் மகாதேசாதிபதியைதூக்கியெறிந்து சிங்களவர் தாமாகவே நியமிக்கும் ஜனாதிபதி ஆட்சியைஅறிமுகப்படுத்திய நாள்இது.பௌத்தமும், சிங்களமும் மட்டுமே ஆட்சியின் அரவணைப்பில் பேணப்படும் என்று அரசியல் அமைப்பு மூலம் அங்கீகாரம் செய்து பௌத்த சிங்கள பேரினவாதம் தன் கொடூர முகத்தைக் காட்டிய நாள்இது. 'சிங்களவர்களுக்கு இது குடியரசு நாளாக இருக்கலாம். ஆனால் தமிழ்மக்களுக்கு கொடியஅரசு நாள். எனவே சிறிலங்காவின் தேசியக் கொடியை தூரவீசி விட்டு கறுப்புக் கொடி கட்டி எமது துக்கத்தை காட்டுவோம்' என்று தமிழினத்தின் தந்தை செல்வா அறை கூவல் விடுத்த நாள் இது.

ஆம்,1972 மே 22 ஆம் நாள் இலங்கையின் அரசியலில் முக்கியத்துவம் பெற்ற ஒரு நாள். பாராளுமன்றத்தில் மூன்றிலிரு பங்கு பெரும்பான்மை பலத்தை பெற்றுக்கொண்ட முதலாவது சந்தர்ப்பத்திலேயே தமிழின விரோதப்போக்கைத் தான் கடைப் பிடிக்கப்போவதாக சிங்களப்பேரின வாதம் அம்பலமாக்கியது. அது காலவரை இலங்கை முழுவதும் கடைப்பிடிக்கப்பட்ட சோல்பரி அரசியலமைப்பின் கீழ் சிறுபான்மையினம் எனக் கருதப்பட்ட தமிழ்மக்களுக்கு 29ஆம் சரத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளையும் ரத்துச் செய்ததாக சிறிலங்கா சோசலிச ஜனநாயகக் குடியரசின் அரசியலமைப்பு வரையப்பட்டது.பௌத்தமும் சிங்களமும் உயர் முன்னுரிமை பெற்றனவாக அரசியலமைப்பின் மூலம் அறிவிக்கப்பட்டது.

இந்த அரசியலமைப்பிற்கு தமிழர்கள் கோரிய திருத்தங்கள் அனைத்தையும் சிங்களப் பேரினவாதம் நிராகரித்தது. இதனால் தந்தைசெல்வா இந்தக் குடியரசுச் சட்டம் அமுலுக்கு வரும் 1972 மே 22 ஆம் நாளை தமிழினத்தின் துக்க தினம் என்று பிரகடனம் செய்தார்.

இதனையடுத்து தமிழீழப் பரப்பெங்கும் சிறிலங்கா அரசுக்கு எதிரான உணர்வலைகள் கொப்புளித்தன. அரச உடைமைகளானபோக்குவரத்து பஸ்கள் முதல் தபாலகம் வரையில் கல்வீச்சுக்கும், தீ வைப்பிற்கும் இலக்காகின. பாடசாலைகள் அனைத்தும் வெறிச்சோடிப் போயிற்று. சன நடமாட்டம் முற்றிலும் ஸ்தம்பித்தது. பொலிஸ் நிலைய முன்றல்களில் பறக்கவிடப்பட்டிருந்த சிறிலங்கா தேசியக் கொடிகள் கூட அறுக்கப்பட்டுத் தீ வைக்கப்பட்டன. சிறிலங்காவின் சிங்கள மேலாண்மையை எதிர்த்துச் சுவர்களும் கூடக் கோஷமெழுப்பின.

இந்தச் சூழ்நிலையில் மட்டக்களப்பு, திருமலை, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் எனப் பல மாவட்டங்களிலும் சுமார் நாற்பத்தியிரண்டிற்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் எந்த வித விசாரணைகளுமின்றி நீண்ட காலம் இவர்கள் சிறைக் கொட்டில்களில் தடுத்து வைக்கப்பட்டுச் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இவ்வாறாகத் தமிழ் மக்களின் ஏகோபித்த எதிர்ப்புக்கும், தமிழ் இளைஞர்களின் வேதனைக்கும் மத்தியில்தான் சிறிலங்கா என்ற சிங்களதேசம் அத்திவாரமிடலாயிற்று. சிங்கள பௌத்த குடியரசாகச் சிறிலங்காவைப் பிரகடனம் செய்த இந்த அரசியலமைப்பு இலங்கையின் மூத்த இடதுசாரிகளில் ஒருவராகவும், சிங்கள மொழி மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டபோது 'ஒரு மொழி என்றால் இரு நாடு' எனப் பாராளுமன்றத்தில் முழங்கியவருமான கொல்வின் ஆர். டி. சில்வாவினால் தான் வரையப்பட்டது அதன் மூலம் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைக்கு இடதுசாரிகளும் துணைபோவாராயினர்.

1972 மே 22 தமிழ் மக்களின் மனதில் ஊட்டிய வெறுப்பும் கோபமும் இன்னமும் தணிந்து போய் விடவில்லை. தமிழ்மக்கள் தமக்கென ஒரு அரசைப் பிரகடனப்படுத்தும் போரில் பலம் வாய்ந்த புலிகளின் பின் அணிவகுத்து நிற்பது இதனைத் துல்லியமாக உணர்த்துகின்றது.

-இனியவன்

# ஒப்பிற்கா ஒப்பாரி?

ஆ...... படுபாவிகளே! என்ன வேண்டும் உங்களுக்கு? என்ன மிருகக் காட்சிச் சாலையா? ஒரு நொடி ஓயாமல் என்னை என்னையே பார்க்கிறீர்களே?

கூடிக் கிடக்கிற ஊரைக் காண அவளது உள்ளாந்தம் வெகுண்டு குமைந்தது-

பாரேன் இந்தப் பெண்டுகளை! என்னத்தைப் பறிகொடுத்து விட்டார்களென்று இப்படி ஒப்பாரி வைக்கிறார்கள்? தன் தன் சொந்தக் கவலைகளைக் கரைக்கிறதுக்கு இதுகளுக்கு வாய்க்கிற இடமும் இதுதானே! ச்சே. இந்தப் பறைமேளம்- நெஞ்சைப் பிளந்து உதைக்கிறது- எரிகிற எரிச்சலில் இது வேறு கொதியெண்ணெயை ஊற்றுகிறது.'

ஊர் என்பது ஒன்றுதான் ஆயிரமாய்.. பத்தாயிரமாய்க் கண்கள். இங்கு ஒரு-நூறு கண்களாவது இருக்கும். ஆயிரம், பத்தாயிரம் கண்களின் பிரதிநிதிகள். கவனம், கவலையெல்லாம் ஒன்றுதான். ஏன் இன்னும் அழுகிறாளில்லை?... பாவி! செத்துக்கிடக்கிறவன் கட்டிய கணவனில்லையா?

இவர்களுக்கென்ன இத்தனை அவா? இத்தனை காலமாய் அழுதேனே, கண்டு களித்தது போதாதா இவர்களுக்கு? ஐந்து ஆண்டுக் குடும்ப வாழ்வில் அழாத நாளா? பிறகென்ன? அழுகையே வருகுதில்லை நெஞ்சுக்குள் அப்படி ஒரு வேகமுமே இல்லை- ஒரு புள்ளியளவு கவலையுமே இல்லை- எப்படி வரும் அழுகை? வாழும் போது சிரிக்கவா விட்டான்? வாடடியெடுத்த நெருப்பு நூர்ந்து போய்க் கிடக்கிறது. மார் மாராய் அடிப்பானேன்? அதற்காகக் குதூகலமாய் இருக்கிறேன் என்றுமா நினைக்கிறீர்கள்?

(2)

துரைசிங்கம்- அவளது கணவன் நல்ல உழைப்பாளி ஆனாலும்......

நீரில் நடப்பது என்ன வித்தை? பாதங்களில் புழுதியே படாமல் நடப்பான் சிவந்து பழுத்த விழிகளைச் செருகிய நிலையில் அவ்விதமாய் வருவான். (இவ்வகையிற் தான் விபத்து அவனைக்காவுகொண்டதும் -மூட்டம் மூடியதாய் மழுங்கிய பார்வைக்குள் வேகமாய் வந்த வாகனம் விழவில்லை) தடாலென்று தெருவாசல் வாய் பிளக்கும். முற்றத்தில் சுருண்டு கிடக்கும் நாய் திடுக்குறும் அதிர்ந்து போய், எழுந்து குரைக்க முனையும்- 'எசமான்'- சந்தடி இன்றியே ஓட்டமெடுக்கும் தள்ளாட்டக் காரனோடு வேலிக் கதியால்களும் தள்ளாடும்.

உள்ளே போவான்-

''ஆ ... அம்மா! ... - அடிவயிற்றைப் பிடித்தபடி துவண்டு குனிவாள்- ஓங்கிய காலைத் திரும்ப வைப்பதற்குள் நிலை தடுமாறுவான்.

ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு காரணம்- பெரும்பாலும் சாப்பாட்டை வைத்துத் தான் தொடங்குவது-

''ஏன்டி இண்டைக்குச் சம்பல்? எங்கை மச்சத்தைக் காணேல்லை?"

''போய் குடிச்ச இடத்தில கேக்க வேண்டியது தானே?

மரத்துக் கிடக்கிற நாக்கு- இதென்ன? கடைசி, ஒரு கருவாட்டுத் துண்டாவது பொரித்து!

''உனக்கு வாய்க்கொழுப்பு மெத்திப் போச்சடி! உன்ர எண்ணப்படி தான் எல்லாஞ் செய்யப் போறியோ? அடிச்சுக் குடுக்கிறவன் நான், என்ர எண்ணத்துக்குத் தாண்டி நீ ஆட வேணும்!

''ஓ.. அடிச்சுக் குடுக்கிறாய்- கள்ளுத் தவறணைக்கையும் சாரயக் கடைக்கையும்! உன்னோட மல்லுக்கட்டி வாங்கிற அற்பனை வச்சுக்கொண்டு இதையாவது செய்தாளே யெண்டு எண்ணிக்கொள்!

''என்னடீ......?''

பறக்குந்தட்டாய்ச் சாப்பாட்டுத் தட்டு; பறநாகமாய்ப் பாய்வான்.

''ஐயோ!..... ஐயோ!..... கொலலுறான்! .... விடு! ... விடு' என்ர தலையை! ...'

## சிறுகதை

ஊரெல்லாம் எதிரொலிக்கும். வந்து கூடாது- ஒடுங்கிக் கிடக்கும்- இதுகளுக்கு வேறு தொழில் இல்லை, எந்தநாளும் இது தான்!

(3)

எல்லாப் பெண்களையும்போலவே எண்ணினாள்- அருமையான வாழ்க்கைத் துணை! இந்த வீட்டிலிருந்து- எல்லாத் துன்பங்களிலுமிருந்து இனியாவது விடுதலை! அண்ணன்மாராம் அண்ணன்மார்! அடக்குச் சட்டம்! அப்பா என்ன குறைவா? கிழடு தட்டினாலும் ஆம்பிளைச் சிங்கம்என்ற மிதப்பு!

என்னத்தைக் கண்டாள்? போகப் போகத் தானே தெரிந்தது-ஐயோ நரியல்லவோ சமுத்தை நீட்டினேன்! பெண்ணாய்ப் பிறந்தவளுக்கு தலைவிதியோ! மலிவாய்க் கிடைத்ததே என்று கொண்டுவந்து சேர்த்தாரே அப்பா! பாவம்! அவருந்தான் என்னசெய்வார்? இருக்கிற வசதிக்கு 'டாக்குத்தர்' மாப்பிள்ளையா பிடிக்க முடியும்? அப்படி வந்தாலும், அவனுந் தான் எப்படி எப்படியோ?

## மையோன்

பேச்சுக்கால் படலத்தின் போது அப்பாவிற்கு முகதரிசனம் சாத்திரியார்- சாதகக் குறிப்பு கைக்குக் கிடைத்தவுடன் மறுவேலையே இங்கு வந்ததுதான். கைகட்டி; அடங்கி. ஒடுங்கி...இந்தப்பவ்வியம் சாத்திரியாரிற்கு மிகப் பிடித்தது- அப்பாவுடன் பேசியதில் கனிவு தென்பட்டது 'எழுபத்தஞ்சு வீதம் பொருந்துது இப்படி அமையிறது கயிட்டம் எப் பாடுபட்டாவது இதையே செய்து வெச்சிடுங்கோ!'

முற்றுக் கேட்கத் தரகர் வந்தார். ''பொடியன் சுருட்டுத் தொழில் எண்டாப் போல என்ன? ஆயிரம் சுருட்டுவான் ஆரால ஏலும்? குணம் நடையிலும் தங்கப்பவுன்!'

அட பேய் மனிதன், உடனேயே ஓம் சொல்லி விட்டதே! -பரமசிவத்தார் பறந்தடித்து வந்தார்; காதைக் கடித்தார்: 'பொடியனிட்ட லேசாப் பாவிக்கிற பழக்கமும் இருக்குப் போல எதுக்கும் ஒருக்கா நல்லா விசாரிச்சுச்செய்யுங்கோ!'

''அப்பிடியே? விசாரிக்கத் தான் வேணும்.

ஆனால் நடக்கவில்லை- உண்மை தானென்று அறிய வர, குழப்பியடித்துவிட்டு... பிறகு எங்கு அலைவது? இவர்களுக்கென்ன? காகங்களுக்குத் தெரியுமா புழுபூச்சியின் வருத்தம்? சாத்திரியார் வேறு இப்படிச் சொல்லிவியிருக்கிறார்.

(4)

அங்கே பார் அம்மாவை வ- மாரிபு மார்பாய் அடித்து. ஓலமிட்டு.. ஓய்ந்து போய் இருக்கிறாள் பாரேன்!

பார்வை எதேச்சையாய்த் தான் பெண்கள் பகுதிக்குள் விழுந்தது.

அதிசயமாய் இருந்தது- அம்மா, உன்னாலுமா நடிக்க முடிகிறது? உயிரோடு இருந்த காலத்தில் அவனை நீ திட்டாத திட்டா? உன்னடியில் என் வேதனைகளைக் கொட்டுகிற போதெல்லாம் துடித்தாயே? பாடாக வசவா? இப்போது என்ன உருக்கம்?

'எங்கே எனக்குச் சுமையாகி விடுவாளோ!'- பயந்து கொண்டு தானே இருந்திருக்கிறாய்?

நிலைமை கடுமையென்றால் தாயிடம் ஓடிவந்து விடுவாள். முதலில் ஆசுவாசங் கிடைக்கும். இரண்டு நாட்கள் பராமரிப்பு பிறகு தாங்கவியலுமா தாயால்? புத்திமதி. ''என்ன இருந்தாலும் அவன் ஆம்பிளை அப்படி இப்படி நடந்தாலும் பொம்பிளையள் தான் அனுசரிச்சுப் போக வேணும்; பெண்ணாய்ப் பிறந்தவளுக்கு ஆம்பிளை தானே உலகம்''!

மருமகனைச் சமாளிப்பது இலகுவாய் இராது- வலிமை மிகு காளையாய் முரண்டு பிடிப்பான் 'ஏன் விட்டுட்டு ஓடவேணும்? இஞ்ச என்ன குறை?

திரும்பத் திரும்பச் சொல்வான்; மாமியார் மசிந்து மசிந்து பாவான். நேரடியாகவென்றால் மருமகனுடன் கனிவாகத் தான் பேசுவது; நெருப்பு உள்ளூரத்தான்- ஈனப்பிறவியிடம் இரந்து நிற்க வேண்டிக் கிடக்கிறதே!

ஒருவாறு இறங்கி வருவான் -தாயும் மகளும் அடிமட்டத்திற்கே போய்விட்டார்கள் என்று தெரியும் போது- காலைப் பிடிக்கவே தயாராகி விட்டார்கள். என்று புலப்படும் போது.

(5)

முதன்நாள் மாலையிலிருந்து உணவில்லை; ஆசுவாசத்துடனை ஒரு வாய்சுடுதண்ணீர் கூட இல்லை. உடல் சோர்ந்து போய்க் கொண்டிருந்தது: மனச்சலிப்பு வேறு; அசதி அசதியாய் இருந்தது. குந்திபிருந்தவள் முழங்காலுக்கிடையில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

நெருக்கமாய் ஆரோ ஒன்று வந்து நிற்கும் அசுமாற்றம் நிமிரவில்லை- அக்காவாக இருக்கும்.

தோளில் கரமொன்று விழுந்தது. உசுப்பியது; குரல் கிசுகிசுத்தது; ஏய்...சந்திரா... இஞ்சபார்! ..

நிமிர்ந்து பார்க்கவில்லை. அக்கா என்ன சொல்ல வந்திருக்கிறாள் என்பது தெரியும்

''இஞ்ச பார்! .. பாரெண்டிறன்! ...'

உசுப்புவதில் பலனில்லை. எல்லாச் சனமும் உன்னைத் தானப்பா பாக்குது! சும்மா வெண்டாலும் கண்கலங்காமல் இருக்கிறியே! உன்ரநெஞ்சென்ன கல்லே...

...எழும்பு! .. நாளைக்கு ஊர் என்ன சொல்லும்!

வெப்பிசாரம் அத்தனையும் அக்காவில் திரும்பியது- ஊர் என்ன சொல்லும்? எதையென்றாலும் சொல்லிவிட்டுப் போகட்டுமே! அழுகையே வருகுதில்லை- உண்மையிலேயே உள்ளுக்குள் கவலை இருந்தால் தானே! வெளிக்கு மட்டும் அழுவதை- இப்படி நடிப்பதை நினைக்கவே சலிப்பாய் இருக்கிறது; எரிச்சலாய் வருகிறது. எப்படித்தான் இந்தச் சனங்களுக்கு முடிகிறதோ!

சொல்லவேல்லாம் சொல்லியாயிற்று; திரும்பத் திரும்ப ஒப்புவித்தும் பார்த்தாயிற்று. அக்காவிடம் எரிச்சல் தான் மீந்தது. ஓமுறைப்பு முறைத்தாள்- எக்கேடாவது கெட்டுப் போ!' என்பதாய்க் கூறிற்று' நகர்ந்து விட்டாள்.

(6)

இறுதிக் கிரியைகள் எல்லாம் முடிந்தாயிற்று; குருக்களும் புறப்பட்டாயிற்று பேழையைத் தூக்கிப பாடையில் வைக்க வேண்டியது தான் ஊர் ஒத்தாடி அவளை நோக்கியது -இப்போதாவது அழுவாளா?

அட சுற்றி அழுவதற்கும் கூட அசைகிறாளில்லையே!

ஊஹூம் ஒருசடப்பிறப்பு; காத்து என்ன பயன்-இறுதி ஊர்வலத்தின் நகர்விலும் ஏமாற்றத்தின் புலப்பாடு

தெருவாசலைத் தாண்டி விட்டது. அவளுள் இனம் புரியா இயக்கம்; சட்டென்று எழுந்தாள்; தெருவாசல் வரைவந்து தரித்தாள். எவ்வளவோ தூரத்தைக் கடந்தும் விட்டது; வெறித்தபடி அசைவற்று நின்றாள். தூரத்தே ஒரு புள்ளியாயிற்று பிறகு மறைந்து போயிற்று. உள்ளிற்குள் என்னவோ ஆகிக் கொண்டு வந்தது— ஆ! என்ன? .... ஏன?...... ஏன் அடிவயிற்றில் லேசாய் எரிகிறது?...... நெஞ்சுக்குள்... ... ஏதோ ஏதோ...... அடைக்குமாப் போல!

அவள் வசமின்றியே விரல்கள் கண்களை அணைத்தன. லேசாய் ஈரக்கசிவு; துளிர்ப்பு.

கதறவில்லை; வீழ்ந்து புரளவில்லை.

திரும்பிய நொடியில் எதிரே சில பெண்கள். சடுதியாய்க் கைசேலைத் தலைப்பை பற்றிக் கொள்ளவில்லை; நெடிப்பேதிற்றுள் கண்களை ஒற்றிச் சுதாகரித்துக் கொள்ளவில்லை— எதைப் பற்றியுமே அக்கறையிலலை— கூச்சமெடுக்கவில்லை; குறுகிப் பேசும் நிலையிலலை தன் போக்கில் உள்நோக்கி நடந்தாள்.

## வல்லரசுகள்

- கஸ்தூரி

வல்லரசுகளே
நீங்கள்,
வாழ்வதற்காக
வாழ்பவர்களை
வதைப்பவர்கள்.

உங்கள் வல்லமைகள்
ஆய்வு செய்யப்படுகையில்
வளர்முக நாடுகளே
வாழா வெட்டியாகின்றன.

நீங்கள்
நிலவில்
வரலாறு படைக்க
மண்ணை
மானபங்கம் செய்பவர்கள்.

வறுமையும் பிணியும்
உங்கள்
வருகையால்
வளர்க்கப்படுபவை.

உங்கள்
தேசத்து
செஞ்சிலுவைச் சங்கங்களும்
சேதங்களைச் சேகரிடபதில்லை;
இருப்புக்களையே
எண்ணிப் பார்க்கின்றன,

உங்கள் நாட்டுக்
கணக்காய்வாளர்கள்
இறப்புக் கணக்குகளை
இருப்புப் பக்கத்தில்
பதிந்து காட்டும்
பட்டதாரிகள்.

உங்களோடு
சம்பந்தம் செய்து கொண்ட
சமதான நாடுகள்
இங்கு
பிரசவித்துக் கொண்டது
பிரச்சினைகளைத்தான்

உங்கள்
விமான நிலையங்கள்
விஸ்தரிக்கப் படுகையில்,
எங்கள்
குடிசைகள் அல்லவா
கொளுத்தப்படுகின்றன!

சமாதான நாடுகளில்
சாமர்த்தியமாய் நுழைந்து
ஆணி வேரை
அறுத்துவிட்டு
வாடாது நிற்க
நீர் ஊற்றுபவர்கள்;

உங்கள்
தலையீடுகளால்
தரைமட்டமாகிப் போன
தேசங்களே
அதிகம்.

நீங்கள் பரவிய
எயிட்ஸ் இங்கே
இயற்கையானதல்ல
என்ற பின்பு,
காற்றும் மழையும் கூட
சந்தேகப்படுகின்றன.

நாளைய செயற்கைப் புயலுக்கு
சொந்தம் கொண்டாடப் போகும்
சர்வதேசப்
பயங்கரவாதிகள் நீங்கள்;

நன்றி:- கஸ்தூரியின் ஆக்கங்கள்

# புலிகள் மீது இந்தியாவின் பரீட்சார்த்தத் தடை

புலிகள்மீதுபுதுடில்லிவிதித்துள்ள தடை தமிழர் பிரச்சினையில் புதியதோர் கட்டமாகும். மிகவும் சிக்கலான இலங்கையின் இனப்பிரச்சினையை புதுடில்லிமேலும் சிக்கலாக்கிய ஒரு நடவடிக்கையாக இது உள்ளது ஈழத்தமிழர் பிரச்சினை சம்பந்தமாக புதுடில்லியின் நடவடிக்கைகள் ஒவ்வொரு காலகட்டத்திலும் தெளிவற்ற விளக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதில் இதுவும் ஒன்றாகும்.

கடந்த கால நடவடிக்கைகளின் தோல்விகளைபுதுடில்லி உணர்ந்திருந்தது என் மெருகான முறையில் இப்பிரச்சினையைக் கையாள்வதாக எண்ணி இப்புதிய நடவடிக்கையைப் புதுடில்லி எடுத்துள்ளது. இதன் பின்னணியையும் இதற்கான ராஜதந்திர நடவடிக்கைகளையும் இவற்றின் உள்நோக்கங்களையும் விளங்கிக் கொள்வது அவசியம்.

புலிகளைப் புதுடில்லி ஆரம்பத்தில் இருந்தே ஒரு தமிழ்த் தேசிய சக்தியாக இனங்கண்டு வந்துள்ளது. இதனால் புலிகளைக் கலைத்துவிட வேண்டும் என்ற முன்னெச்சரிக்கையுடன் புதுடில்லி நடந்து வந்துள்ளது ஆயினும் அவர்களின் எதிர் நடவடிக்கைகள் புலிகளைத் தமிழ்த் தேசியத்தின் ஏகசக்தியாக்கி பாற்றிவிட்டது.

ராஜீவ் காந்தியை புலிகள் கொலை செய்ததாக நம்பும் புதுடில்லி [புலிகள் இதை மறுத்து விட்டார்கள்) அதன் பெயரால் புலிகள் மீது தீவிர நடவடிக்கைகளை எடுப்பதற்கான வாய்ப்புகளை ஆராய்ந்தபோது நினைத்த மாத்திரத்தில் புலிகளிற்கு எதிராக நடவடிக்கை எடுப்பது கடினம் என்பதை உணர்திருந்தது ஆயினும் தமது தீவிர நடவடிக்கைக்கான சில பரீட்சார்த்தங்களை அது யோசிக்கத் தவறவில்லை. ராஜீவ் காந்தியின் மரணத்தின் பெயரால் புலிகளைத் தடை செய்வது நிரந்தரமாக புலிகளுடன் பகைப்பதாக அமையும் என்ற நிலையில் ஒரு இடைவெளித்தீர்மானத்தை அது எடுத்துள்ளது அன்று தமிழ்த் தேசிய வாதத்தின் அடிப்படையில் தமிழக அரசியலைக் குழப்புபவர்கள் என்ற ஒரு பொதுக் குற்றச்சாட்டின் பேரில் புலிகள் மீது புதுடில்லி தடை விதித்துள்ளது. இக்குற்றச்சாட்டு எந்தக் கட்டத்திலும் அகற்றப்படக்கூடியது ராஜீவ் காலத்துத் தீர்மானங்களைப் போன்று வெட்டொன்று துண்டு இரண்டு என்ற வகையில் அமையாது நிலைமைக்கு ஏற்ப நெகிழ்ந்து வளைந்து கொடுக்கத்தக்க வகையில நரசிம்மராவ் அரசு இத்தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது பரீட்சார்த்த சூழலுக்கு ஏற்ப இதன் நெகிழ்ச்சித்தன்மை மாறுபடலாம்.

இத்தீர்மானத்திற்கு இந்திய அரசு உடனடியாக வரக்கூடிய சூழல் இல்லாதிருந்தது என்பதைக் கருத்திற் கொள்வதுடன் இந்திய உள்நாட்டு அரசியலில் இதற்கு ஒரு ராஜதந்திர இலக்கு உண்டென்பதும் கவனிக்கத்தக்கது மத்திய அரசானது தடையுத்தரவை நேரடியாகத்தானே பிறப்பிப்பதாக் காட்டிக் கொள்ளாது ஒரு நாடகம் ஆடியுள்ளது போலத் தோன்றுகிறது. மத்திய அரசு நேரடியாகத் தீர்மானம் எடுக்கும் பட்சத்தில் அது தமிழக மக்களிடம் மத்திய அரசுக்கு எதிரான உணர்வலைகளை ஏற்படுத்திதமிழ்த் தேசியத்திற்கு வழி சமைப்பதாக அமைந்துவிடும் என மத்திய அரசு கருதியதால் மத்திய அரசு தடையை விரும்பாததுபோலவும்தமிழக அரசே தடையை வற்புறுத்தியதாகவும் ஒரு தோற்றத்தை நரசிம்மராவ் ஏற்படுத்தியுள்ளார் போல் தெரிகிறது. ஜெயலலிதாவின், புலிகளைத் தடை செய்யவேண்டும் என்ற கோரிக்கைக்குப் பின்னாலும், கொங்கிரஸ் கட்சியின் திருப்பதி மகாநாட்டுத் தீர்மானத்திற்குப் பின்னாலும் ஒரு உள் அரசியல் இருக்க வாய்ப்புண்டு. நரசிம்மராவ் கட்சியின் தலைவர் என்ற வகையில் இவ்வாறான ஒரு தீர்மானம் பிரிக்கப்படுவதையே தடுத்திருக்கலாம். இத்தீர்மானம் நிறைவேற்றப்படாதிருந்தும், ஜெயலலிதா இதேபாணியில் குரல்கொடுத்திருந்தும் இரண்டுக்கும் இடையில் ஒரு ஒருங்கிசைவு இருப்பதை அவதானிக்க முடிகிறது. இதில இரண்டு விதமான ராஜதந்திர வெற்றிகளை நரசிம்மராவ் அடைந்துள்ளார் ஒன்று தமிழக அரசுதான் தடைக்குக் காரணம் என்ற நிலையை உருவாக்கியமை இதன்மூலம் தமிழ்த்தேசிய வாதம் தமிழகத்தில் எழுவதைத் தடுக்க முயன்றமை இரண்டாவது இலங்கை இனப்பிரச்சினைஒரு சிக்கல் வாய்ந்த உணர்ச்சிபூர்வமான ஒன்று. இது சம்பந்தப்பட்ட விடயங்களில் ராஜீவ் எதேச்சையாக நடந்து கொண்டு அதற்கான முழுப்பழிகளையும் தன் தலையில் சுமக்கவேண்டியிருந்தது இதனைஉணர்ந்து கொண்டநரசிம்ராவ் இத்தடையுத்தரவைத் தான் மட்டும் தனித்து எடுத்ததாகக் காட்டாது கட்சித் தீர்மானமாக. (மகாநாட்டுத் தீர்மானம்) காட்டியதுடன் தமிழக அரசையும் அதில் பொறுப்பேற்க வைத்து அதில் இந்தியாவின் ஆதரவையும் திரட்டும் வகையில் நடந்து கொண்டார்.

நரசிம்மராவ் எவ்வளவுதான் தந்திரோபாயமாக நடந்தாலும் ஈழப்பிரச்சினைக்குள்ள தர்க்க பூர்வ நிலைமைகளை இன்னும் புதுடில்லி சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது. தன் கைப்படாத சமாதானம் ஒன்று இலங்கையில் ஏற்படக்கூடாது என்று புதுடில்லி நினைக்கிறது. தனது முயற்சியின் தோல்வியை மனதிற்கொண்டுதான் தோல்வியடைந்த நிலையில் வேறுயாரும் வெற்றிபெறக்கூடாது என்றும் புதுடில்லி விரும்புகிறது ஆனால்புதுடில்லி விரும்புவதுபோல் டில்லியின் கைப்படும் ஒருசமாதானத்தை கொழும்பு சற்றும்விரும்புவதாக தெரியவில்லை டில்லி விரும்பும் பாணியில் புலிகளை அழிப்பது என்பது இந்தியாவுக்கும் அதன் தோழமை இயக்கங்களிற்கும் இலங்கையில் வழிவிட்டுக் கொடுக்கும் ஒரு தற்கொலை முயற்சி என்று கொழும்பு கருதுகிறது இந்நிலையில் கொழும்பிலுள்ள ஒரு சிறுவன் கூட புலிகளை அழிப்பது என்பது தன்னையே அழிப்பதற்குச் சமனானது என்பதை உணர்வான் அதனால் புதுடில்லியின் விருப்பத்திற்கு கொழும்பு மானசீகமாகச் செவிசாய்ப்பது என்பது கடினமானவே இருக்கும் ஒவ்வொரு சிங்களவரிடமும் இந்திய எதிர்ப்புரத்தத்தில் ஊறியுள்ளது என்பதுடன் பிரேமா தவிர்ந்த எவர் பதவிக்கு வந்தாலும் சிங்கள மக்களின் சமூக யதார்த்தத்தின் பிரகாரம் சிங்கள ஆட்சியாளர் இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுப்பதே நடைமுறை அரசியலாக இருக்கும் என்பதை இந்தியா உணராமல் இருந்தால் அது விந்தையே சர்தேஷ் பாண்டே தனது நூலில் கூறியுள்ளது போல இலங்கைச் சமூகத்தை இந்திய ராஜதந்திரிகள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை, என்பதை இந்த நினைவு கூர்வது இன்றும் பொருந்தும்.

மு. திருநாவுககரசு

# தமிழுக்கு வளம் சேர்க்க வந்துள்ள 'க்ரியா'வின் தற்காலத் தமிழ் அகராதி

தமிழ் நாட்டிலும் அல்லது தமிழ் வாழ்கின்ற ஏனைய நாடுகளிலும் மொழிக்கு வளம் சேர்க்கும் புதிய சொற்களின் வருகைபற்றி இன்றுபூரணமாக ஆய்வு செய்யப் படவில்லை. இவ்வகையில் தற்போது தமிழகத்தில் வெளியிடப்பட்டிருக்கும் தற்காலத் தமிழ் அகராதி வரவேற்கப்படக் கூடிய புதியதொரு முயற்சியாகும்.

'கன்னித் தமிழ்' என்பது ஓர் அழகானகற்பனையே. உண்மையில் தமிழும் மற்ற உயிரோட்டமுள்ள உலகமொழிகளைப் போலவே காலந்தோறும் மாறி மாறி வந்துள்ளது. இன்னும் சொல்லப் போனால் காலந்தோறும் மாற்றங்களைப் பெற்றுப் பெருகி வருவதே ஓர் உயிருள்ள மொழிக்குப் பெருமையாகும். சமஸ்கிருதம் போன்ற பேச்சு வழக்கு அற்றுப் போன மொழிகள் மாறாமலும், வளராமலும் அப்படியே நின்று நிலைத்து விட்டன. கடந்த அரை நூற்றாண்டுக்குள் தமிழ் மொழியில் ஏற்பட்டிருக்கும் மிகப் பெரும் மாற்றங்களைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் ''க்ரியா'' வின் தற்காலத் தமிழ் அகராதியைப் பார்த்து. வையாபுரிப் பிள்ளையின் தலைமையில் வெளியான தமிழ்ப் பேரகராதியுடன் இதை ஒப்பிட்டுப் பார்த்தால் புரிந்து கொள்ளலாம்.

தற்காலத் தமிழின் விரிவான பயன்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் செய்தித்தாள்கள், வார இதழ்கள், சிறுகதை, நாவல் முதலிய படைப்பிலக்கியங்கள், வேளாண்மை அறிவியல் போன்ற துறை நூல்கள். பாடநூல்கள், உரைநூல்கள், ஒலி - ஒளிபரப்புத் தமிழ்நடை போன்ற தரவு மூலங்களிலிருந்து ஏறத்தாழ 40,000 பக்கங்களைப் படித்துப் பார்த்து. அவற்றிலிருந்து ஒன்றரை லட்சத்திற்கு மேற்பட்ட வாக்கியங்களும் சொற்தொடர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த அகராதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

அகராதியின் பொறுப்பாசிரியர் டாக்டர் பா ரா. சுப்பிரமணியன், 'அறிமுகம்' என்ற தலைப்பில் அகராதியின் நோக்கங்களையும், அதன் அமைப்பு முறைகளையும், அதைப் பயன்படுத்தும் முறையையும் மிகவும் சுருக்கமாகவும், தெளிவாகவும் எடுத்துக் கூறியுள்ளார்.

தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள், தற்காலத் தமிழைச் சரியாகப் புரிந்து கொண்டு பயன்படுத்தவும், தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் தற்காலத் தமிழைப் புதிதாகக் கற்பதற்கும் இந்த அகராதி தொகுக்கப்பட்டுள்ளது.

அகராதியில்சேர்க்க வேண்டியசொற்களைத்தேர்வுசெய்ய இரு வரையறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்காலத் தமிழ்' என்பது தமிழ் மொழி தமிழகத்தில் ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்ட 1956-ம் ஆண்டுக்குப் பிறகு எழுந்த உரைநடையில் எழுதப்பட்டுள்ள மொழி என்று இங்கு காலவரையறை செய்யப்பட்டுள்ளது 'தற்காலத் தமிழ்' 1956-ம் ஆண்டில் தான் துவங்குகிறது என்று கூற முடியாவிட்டாலும் தமிழ் எதிர்கொண்ட தற்காலச் சவால்களால் பெரிய பாதிப்பை மொழியில் ஏற்படுத்தியிருக்கிறது என்ற முறையில் தமிழ் ஆட்சி மொழியான இந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

அடுத்தபடியாக இந்த அகராதி 'தற்காலப் பொது எழுத்துத் தமிழுக்கானது' என்ற எல்லையும்வரையறுக்கப்பட்டுள்ளது தற்கால எழுத்துத் தமிழில் இடம் பெற்றுவிட்ட வட்டார சமூக, மத, வழக்குகளும் ஓரளவு பேச்சுத்தமிழும் இந்த அகராதியில் சேர்க்கப் பட்டுள்ளன. ஆனால் இலக்கணவரம்புகளுக்குள் கட்டுப்படாத கொச்சைத் தமிழ்ச் சொற்கள் இதில் இடம் பெறவில்லை.

இந்திய மொழிகளினுள் கணிப்பொறியின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட முதல் அகராதி இதுவேயாகும் சொல் தேர்வு திருத்தும் பணி அகரவரிசைப்படுத்துதல் போன்ற அகராதிப் பணிகள் அனைத்தும் கணிப்பொறியினால் செய்யப்பட்டுள்ளது.

சொற்களின் பொருள்களைக் கூறுவதில் இந்த அகராதி ஒரு புது முறையைக் கையாண்டுள்ளது ஒரு சொல்லுக்கு மற்றொரு சொல்லால் பொருள் தராமல் சொல்லுக்குப் பொருள் விளக்கம் அல்லது பொருள் வரையறை (definition) ஒன்றைத்தரும் அகராதி தமிழில் இது ஒன்று தான் உதாரணமாக லஞ்சம் என்பதற்கு கையூட்டு என்றும் கையூட்டு என்பதற்கு லஞ்சம் என்றும் பொருள் தராமல் கையூட்டு என்ற சொல் புதியதாக இருப்பதால் அதற்கு லஞ்சம் என்ற பொருளைத் தந்து 'லஞ்சம்' என்ற தலைப்பில் அச்சொல்லுக்கான விவரமான பொருள் விளக்கமும் தரப்பட்டுள்ளது.

மற்றொரு புதிய முயற்சி தற்காலத் தமிழில் உயர் வழக்கு அருகிவரும் வழக்கு, பெருகிவரும் வழக்கு என்று சொற்களை வகைப்படுத்தியுள்ளதாகும். இவற்றுள் உயர்வழக்கு என்பது 'நான்' என்பதற்கு 'யான்' என்ற சொல்லைப் பயன்படுத்தும் பண்டித நடையைக் குறிக்கிறது. எனினும் இத்தகைய சொற்கள் இந்த அகராதியில் குறைவாகவே இடம் பெற்றுள்ளன. 'அருகிவரும் வழக்கு' என்ற பகுதியில் தரப்பட்டிருக்கும் சொற்களை மேலோட்டமாக அவதானித்தால் வடமொழிச் சொற்கள் பலவும் வழக்கொழிந்து வருவதைக் கவனிக்கலாம். 'நமஸ்காரம்' என்றும் 'பிரசங்கம்' என்றும் இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழில் வழங்கிய வடமொழிச் சொற்கள் 'வணக்கம்' என்றும் சொற்பொழிவு' என்றும் மாற்றம் அடைந்துள்ளன.

இந்த நூற்றாண்டில் தனித் தமிழ் இயக்கத்தின் தாக்கத்தால் வடமொழிச் சொற்களும், பிறமொழிச் சொற்களும் எழுத்துத் தமிழில் அருகி வருவதைப் போலவே தற்காலத் தமிழில் பெருவழக்காகப் பரவி வருபவை பெரும்பாலும் தனித்தமிழ்ச் சொற்களாகவே உள்ளன.

தமிழில் ஒலி மாற்றம் அடைந்துள்ள ஆங்கிலச் சொற்களும், பொருள் மாற்றம் பெற்றுள்ள ஆங்கிலச் சொற்களும், எவ்வித மாற்றமும் பெறாமல் அப்படியே வழங்கி வரும் சொற்களும் கூட இவ் அகராதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

இவற்றிற்கு முறையே ஆஸ்பத்திரி, இஸ்திரி, துருப்பு, ரசீது என்பன போன்றவற்றையும் எவர்சில்வர், ரயில் போன்றவற்றையும், காலண்டர், பஸ், போலீஸ், ரப்பர், ரேவுள் போன்றவற்றையும் இங்கு குறிப்பிடலாம்

மேலும் இவ் அகராதியில் சேர்க்கப்பட்டுள்ள புதிய தமிழ்ச் சொற்களும், பழைய சொற்களுக்குப் புதிய விளக்கமும் அகராதியின் உயிர்நாடி என்றே குறிப்பிடலாம். மிக விரிந்த தமிழ்ப் பேரகராதியில் இல்லாமல் இப் புது அகரா

(6 ஆம் பககம் பார்க்க)

ஐராவதம் மகாதேவன்

# இந்தியா பேச்சுவார்த்தைகளிற்கு இடைஞ்சலாயுள்ளது?

இந்தியா விடுதலைப் புலிகளைத் தடைசெய்துவிட்டது. இத் தடையுத்தரவு குறித்துக் கொழும்பில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட இந்தியத்தூதுவர் நாகேந்திர நாத் ஜா ''இந்தியா விடுதலைப் புலிகளைத் தடை செய்ததை இலங்கை அரசு சரியானதொரு தீர்வை நோக்கி நகர்வதற்குத் தூண்டுதலாக அமைகிறது.'' என்று கூறியுள்ளார். தூதுவர் மங்கலான வார்த்தைகளுக்கூடாகக் கதைத்துள்ளார். அவரது கூற்று தெளிவற்றதாகக் காணப்படுகிறது. 'சரியான தீர்வு' என்று அவர் எதைக் கருதுகிறாரோ தெரியவில்லை. ''அரசியல் தீர்வு குறித்துச் சிந்திக்க முன்பு இலங்கை அரசு இப்போதுள்ள கடினமான யதார்த்தத்தைக் கவனத்திற் கொள்ள வேண்டும்'' என்றும் அவர் கூறுகிறார். 'யதார்த்தம்' என்று அவர் கருதுவது இன்று இந்தியாவில் புலிகள் தடை செய்யப்பட்டுள்ளமையால் எழுந்துள்ள நிலைமைகளைத்தான். அதேசமயம் மேற்படி யதார்த்தத்திலிருந்து சரியான தீர்வை நோக்கி நகர்வது எனும்போது அவர் அரசியல் தீர்வையா? இராணுவத் தீர்வையா? அழுத்திக் கூற விரும்புகிறார் என்பதை அவரது மங்கலான வார்த்தைகளுக் கூடாகப் புரிந்து கொள்வது கடினமாயுள்ளது.

எனினும் புலிகளைக் குறித்த புது டில்லியின் நிலைப்பாடு ஓரளவிற்குப் புரிந்து கொள்ளக் கூடியதாகவே உள்ளது. இந்தியா புலிகளை ரஜீவ் காந்தியின் கொலையோடு சம்பந்தப்படுத்துகிறது புலிகள் மேற்படி குற்றச்சாட்டை மறுத்து வருகிறார்கள். ரஜீவின் கொலையைத் தொடர்ந்து ஐரோப்பாவில் இயங்கும் புலிகளின் தகவல் தொடர்பு மையங்களை அங்கிருந்து அகற்றிவிடுமாறு ஐரோப்பிய நாடுகளை இந்தியா கோரிவருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. ஏற்கனவே திரு கிட்டு லண்டனிலிருந்து வெளியேற்றப்பட்டமைக்கு இந்தியா பிரிட்டனை வற்புறுத்தியதே காரணம் என்றும் கூறப்படுகிறது.

அதேசமயம் ஜனாதிபதி பிரேமதாசா சமீபத்தில் இந்திய அமைதிகாக்கும் படையை ஒரு ஆக்கிரமிப்புப் படை என வர்ணித்துள்ளார். இந்நிலையில் இன்று இலங்கையில் இந்திய எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினையும் இது தான். புலிகளையோ பிரேமதாசாவையோ புதுடில்லியால் நினைத்தபடி கையாளமுடியாதுள்ளது.

யூ. என். பிக்குள் உள்ள இந்திய எதிர்ப்பாளர்களின் கூடும் போக்குடையவராகவே ஜனாதிபதி பிரேமதாசா தெரியவந்துள்ளார். இந்தியப்படை இலங்கையிலிருந்து விலகிய பின் அவர் இரு நாடுகளிற்கும் இடையில் பகையற்றதொரு நிலையைப் பேண முயற்சித்தார் நட்புறவு உடன்படிக்கை ஒன்றைப் பற்றியும் சிந்திக்கப்பட்டது. ஆனால் பிரேமதாசா கற்பனை செய்தது போல இந்திய - ரஷ்ய நட்புறவு உடன்படிக்கையை ஒத்த ஒரு நட்புறவு உடன்படிக்கைக்கு இந்தியா தயாராக இருக்கவில்லை: எதையும் ரஜீவ் - ஜே. ஆர். உடன்படிக்கையிலிருந்து ஆரம்பிப்பதற்கே இந்தியா விரும்பியது. அந்த வகையில் நட்புறவு உடன்படிக்கையானது ரஜீவ் - ஜே. ஆர். உடன்படிக்கையின் தொடர்ச்சியாக அமைவதையே இந்தியா வலியுறுத்தியது எனவே பிரேமதாசா நட்புறவு உடன்படிக்கை பற்றிப் பேசுவதை பின்னர் நிறுத்திக்கொண்டார்.

இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமானபோதும் பிரேமதாசா புதுடில்லியைநோக்கிச் சிறிது திரும்பினார். இந்தியாவுடன் வர்த்தக ஒத்துழைப்புக் குறித்து முதலில் அதிகாரிகள் மட்டத்திலும் பின்னர் அமைச்சர்கள் மட்டத்திலும் சிந்திக்கப்பட்டது. மன்னாரில் இருநாடுகளும் இணைந்து செய்யப்போகும் எண்ணைவள ஆய்வு குறித்தும் செய்திகள் வெளிவந்தன. திருக்கோணமலையிலுள்ள எண்ணைக் குதங்களை புனரமைக்கவும், பாவிக்கவும் இந்தியாவிடம் தருவது என்றும் அத்தோடு திருக்கோணமலைத் துறைமுகத்தில் இந்தியக் கடற்படைக் கப்பல்கள் தரித்து செல்ல அனுமதிப்பது எனவும் உத்தேசிக்கப்பட்டது. பாக்கு நீரிணையில் இருநாடுகளும் கூட்டு ரோந்தில் ஈடுபடப் போவதாகவும் கூறப்பட்டது. ஆனால் இவையெல்லாம் அநேகமாக பேச்சளவிலேயே நின்று விட்டன முக்கியத்துவமற்ற சில வர்த்தக ஒத்துழைப்புக்களைத்தவிர பெரும்பாலான விசயங்களில் பிரேமதாசா தயக்கம் காட்டினார். இலங்கை காவல்துறைக்கு மாருதி வாகனங்கள் தருவிக்கப்பட்டன. இலங்கை இராணுவ அதிகாரிகள் 700 - 800 பேர் வரை இந்தியாவில் மேற்பயிற்சிக்காகச் சென்றார்கள். இவைபோன்ற சில விஷயங்களைத்தவிர உருப்படியாக ஒத்துழைப்பதில் இருபகுதியினரிடமும் இருந்த சந்தேகங்கள் இடம் தரவில்லை. இடையில் சார்க் மாநாட்டைக்கூட்டுவதில் புதுடில்லிபிரேமதாசாவை அவமானப்படுத்தும் விதத்தில் நடந்து கொண்டதாகவும் ஒரு குற்றச்சாட்டு எழுந்தது.

பிரேமதாசா தொடர்ந்தும் இந்திய எதிர்ப்பாளராகவே காட்சி தந்தார். யூ. என் பியிலிருந்து விலகிச்சென்ற அதிருப்தியாளர்கள் எழுப்பிய பிரதான குற்றச்சாட்டு புலிகளுக்கு பிரேமதாசா ஆயுதங்கள் தந்தார் என்பதாகும். இக்குற்றச்சாட்டை எதிர்கொண்ட பிரேமதாசா இந்திய எதிர்ப்பையே முன்வைத்தார். அதாவது இந்தியப் படையினர் உருவாக்கிய ரி. என். ஏ ஐத் தோற்கடிப்பதற்காக புலிகளுக்கு ஆயுதம் கொடுக்கப்பட்டதாக அவர் சொன்னார். அவரது விவாதம் தென்னிலங்கையில் எடுபட்டது இன்று புலிகளுக்கு ஆயுதம் தந்த விவகாரம் ஒரு மங்கிப்போன குற்றச்சாட்டாகிவிட்டது. மேலும் தேயிலைத் தோட்டங்களைத் தனியாரிடம் விற்றபோது அவற்றை வாங்கமுன்வந்த இந்திய முதலாளிகளை பிரேமதாசா நிராகரித்துவிட்டார். மலை நாட்டில் இந்தியர்கள் தளமமைத்துவிடுவார்கள் என்ற அச்சமே பிரதான காரணம் என்று தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இவ்வாறாக, தொடர்ந்தும் புதுடில்லியைப் பொறுத்தவரை பிரேமதாசா ஒரு உறுத்தலான ஆளாகவே இருந்து வருகிறார் குறிப்பாக கெடுபிடிப் போர் விலகிய உலகில், புதிய உலக ஒழுங்கின் கீழ் பிரேமதாசாவின் இடம் அப்படியொன்றும் பலவீனமானதல்ல. கடந்தசிலமாதங்களிற்கு முன்னர் நடந்த இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் அவர்மீது சுமத்தப்பட்ட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை மீறி மேற்குலகம் அவரை ஆதரித்தது. அவர் கேட்டதை விடக் கூடுதல் நிதி தரப்பட்டது. இங்கு ஒன்றை முக்கியமாகக் கவனிக்க வேண்டும் அதாவது இந்தியாவை எதிர்ப்பதில் கெடுபிடிப்போர் காலத்து ஜே ஆர்.ஐ விடவும், புதிய உலக ஒழுங்கின் கீழ் வரும் பிரேமதாசா பலமானவராகக் காட்சிதருகிறார்.

மன்னார் கடலில் எண்ணைவள ஆய்வு குறித்தோ அல்லது திருக்கோணமலையிலுள்ள எண்ணைக்குதங்களைப் பற்றியோ இப்பொழுது யாரும் பேசுவதில்லை. ஆனால் புத்தளத்தில் வொய்ஸ் ஒவ் அமெரிக்காவின் அலைமாற்றிநிலையத்தை நிறுவுவதற்கானவேலைகள் மிகுந்த ஈடுபாட்டோடும்விரைவாகவும் நடந்துகொண்டிருக்கின்றன இது ரஜீவ்-ஜே ஆர். உடன்படிக்கையை வெளிப்படையாக மீறும் ஒரு செயல். இந்நிலையம்கட்டிமுடிக்கப்பட்டு இயங்க ஆரம்பித்

நிலாந்தன்

தால் இந்துமா கடலின் வானலைகளில்அமெரிக்காவின்செல்வாக்கும் என்றுமில்லாதவாறு அதிகரிக்கப் போகிறது.

இந்நிலையில், புலிகளைத் தடைசெய்ததின் மூலம் தன்னால் கையாளக் கடினமாயுள்ள பிரேமதாசாவிடம் புதுடில்லி எதை எதிர் பார்க்கிறது?

இலங்கைத்தீவில் ரஜீவ்-ஜே.ஆர். உடன்படிக்கைக்கு வெளியில் ஒரு புரிந்துணர்வை ஏற்கனவே உருவாக்கிய புலிகளும், பிரேமதாசாவும்இனிமேலும் அவ்வாறானதொரு புரிந்துணர்வை உருவாக்க முயலலாம் என்று இந்தியா கருதக்கூடும். அத்தகைய சமாதானம் இந்தியாவை வெறும் பார்வையாளராக்கி விடக்கூடியது என்பதோடு நிச்சயமாக மேற்கத்தைய மத்தியஸ்தத்தையே அது கோரும். எனவே தன்னால் கையாள முடியாத இவ்விரு சக்திகளும் சமாதானத்தில் ஈடுபடுவதை விடவும் குறைந்த பட்சம் யுத்தத்தில் ஈடுபடுவதே இந்தியாவின் விருப்பம் போலுள்ளது. இன்று இந்தியாவில் புலிகள் தடைசெய்யப்பட்டுள்ளதால் இந்தியாவைப்பின்தளமாகக்கொண்டு புலிகள் விநியோகங்களைப்பெறுவதை அனேகமாகக் கட்டுப்படுத்தி விடலாம் என்று புதுடில்லி கருதுகிறது. இதனால் புலிகள் ஒரு மரபு ராணுவம் போல உருவாவதில் திட்டவட்டமான வரையறைகளை ஏற்படுத்த முடியும் என்று புதுடில்லி நம்பக்கூடும். இது கொழும்பிலுள்ள ராணுவத் தீர்வில் நம்பிக்கை கொண்ட

(2 ஆம் பக்கம் பார்க்க)


---

45 ஆவது நாள்

## நினைவு அஞ்சலியும்

### அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்

தாயக மண்ணில்
27 — 01 — 1972



தாயக மண்ணுக்காய்
08 — 04 — 1992

## லெப். புலித்தேவன் (பார்த்தீபன்)

### (முருகேசபிள்ளை சிதம்பரேஸ்வரன்)

திதி : 22 - 05 - 1992

செல்ல மகனேயென் சிதம்பரேஸ்வரா
சிவாவென் றுன்னை செல்லமாய் அழைப்போமே
இன்றுன் அன்புத் தங்கையும் ஆசையக்காவும்
எங்கள் அண்ணா தம்பி எங்கேயென்று
என்னைக் கேட்கின்றார் என்ன செய்வேன் நான்
ஆண்டிருந் தோமெங்கள் சொந்த மண்ணை
மீண்டும் ஆண்டிருக்க போர்க்கோலங் கொண்டாய் நீ
லெப்டினன்(ட்) புலித்தேவனாய் மூண்டெழுந்த வெஞ் சமரில்
தப்பிலித் தென்னிலங்கைத் தீயோரின் செருக்கறுத்து
மாவீரனாய் வீரசொர்க்கம் அடைந்தாய் என்னவோ
காலன் நாடு தப்பிச்சென்ற கயவரைச்சாட சென்றாய் என்னவோ
அன்னை அன்னரத்தினம் வீரமகனைக் காண்பதற்கு
அன்புடன் அழைக்க ஆசையுடன் போனாய் என்னவோ
ஐயோமகனே தணியுதிலை உன்பிரிவு தாரணியில்
சுதந்திரத் தீ பரவட்டும் எட்டுத் திக்கெங்கும்
இதமான தமிழீழம் மலரட்டும் மானிலத்தில்
சுதந்திர விடிவெள்ளியாய் வானிலுனைக் காண்கின்றோம்
எழிநடத்து முனைக்கண்டு தணியட்டும் எம்துயர்

அன்புத்தந்தை: மா. முருகேசபிள்ளை
அன்பு அக்கா: மு. மங்கனேஸ்வரி
அன்புத்தங்கை: மு. சர்வேஸ்வரி
வட்டு கிழக்கு, மைத்துனன் : மு. ஸ்ரீறஞ்சன்
சித்தங்கேணி. மருமகன் : ஸ்ரீ, உமாபதி

(சி/4407)

---

## தமிழுக்கு

தியில் இடம் பெற்றுள்ள தமிழ்ச் சொற்களும் பொருள்களும் படிப்பவர்களுக்கு வியப்பை ஊட்டவல்லதாகும். உதாரணமாக 'க' என்ற ஓர் எழுத்தில் மட்டும் தொடங்கும் புதிய சொற்களில் சிலவற்றைக் குறிப்பிடலாம். கடையடைப்பு, கண்ணாடி இழை, கண்ணீர்ப்புகை, கந்துடைப்பு கணக்கெடுப்பு கணிப்பொறி, கதிரியக்கம், கருத்தடை, கரவொலி, கருத்தரங்கம், கருதுகோள், கல்வீச்சு, களாச்சாரம், களப்பறை, களப்பணி, கறுப்புப்பணம், கன்னிமுயற்சி, காசோலை, கால்கடுதாசி, கால்புள்ளி, கிம்பளம் கிராக்கிப்படி, குடும்ப அட்டை, குடும்பக் கட்டுப்பாடு, குழுமம் குறியீட்டெண், கூட்டாட்சி, கேலிச் சித்திரம், கேளா ஒலி, கைப்பாவை கொரில்லா இத்யாதி. ஒரே ஒரு எழுத்தில் தொடங்கும் புதிய சொற்களில் ஒருசில மட்டுமே இவை என்றால் இத் தற்காலத்தமிழ் அகராதியின் புதிய சொல்வளம் எத்தகையது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

பழைய சொற்கள் புதிய பொருள்களைப் பெற்றுள்ளதையும், இவ் அகராதி முதன் முறையாகப் பதிவு செய்துள்ளது. கருங்காலி, கலவரம், கலைஞன், கழகம், குடிமகன், கைக்கூலி, கொறடா, கோப்பு முதலிய மிகப் பல பழைய சொற்களுக்கு தமிழ்ப் பேரகராதியில் இல்லாத புதிய பொருள்களை இந்த அகராதியில் காணலாம். மொழியியல், சமூகவியல், அரசியல், அறிவியல் ஆகிய பல துறைகளில் பல்லாண்டுகள் ஆய்வு செய்ய வேண்டிய புதிய தகவல்கள்பல இந்தத் தற்காலத் தமிழ் அகராதியில் கொட்டிக் கிடக்கிறது என்றால் மிகையானதல்ல.

நன்றி: வீரகேசரி.

---

## காரை நகர்பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம்

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

## 24 - 06 - 1992

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 24 - 06 - 1992 புதன்கிழமை காலை 9 . 00 மணிக்கு வழக்கம்பரை கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெறும். பொதுச்சபை உறுப்பினர்கள் தங்கள் பெயர் விலாசத்தையும் பிரேரணை ஏதும் கொண்டுவர இருப்பின் அதனை எழுத்து மூலம் செயலாளர் காரை நகர் ப. நோ, கூ. சங்கம், வழக்கம்பரை, சுளிபுரம் என்ற முகவரிக்கு 30 - 05 - 1992 க்கு முன் அனுப்பி வைக்கவும். அல்லது நேரடியாக காரியாலய நேரத்தில் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்
காரைநகர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்
வழக்கம்பரை - சுளிபுரம்

( சி / 4446 )

# இலங்கையில் புதிய நண்பர்களை இந்தியா தேடுகிறது

"விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வதன் மூலம் இந்திய அரசு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா மீதான பிடியை இழக்க கூடும் மேலும் விடுதலைப்புலிகள் மீதான தடை நீண்டகால நோக்கில் இந்தியாவின் நலனுக்குவிரோதமாகவே அமையும்" விடுதலைப்புலிகளை இந்தியாவில் தடைசெய்வது குறித்து இந்திய வெளியுறவுச் செயலாளர் ஜே. என் டிக்சிற் இவ்வாறான கருத்தை தெரிவித்திருந்த போதும் விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டுள்ளது.

திரு ஜே.என். டிக்சிற்றின் இக்கருத்து ஒருவகையில், இலங்கை தொடர்பாக இந்தியாவின் முன்னைய அணுகுமுறையின் தொடர்ச்சியே ஆகும். அதாவது தமிழ்க்குழுக்களுக்கு ஆயுதமும் பயிற்சியும் வழங்கி சிறிலங்காவைத் தனது பிடிக்குள் வைத்துக் கொள்ளமுயற்சித்ததுபோன்றதாகும் ஆனால் இந்த இராஜதந்திர அணுகுமுறை உலகில் கெடுபிடி யுத்தம் நிகழ்ந்து கொண்டிருக்கையில் பெரும்பாலான நாடுகளில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த அணுகுமுறையை ஒத்ததாகும். அதாவது எதிரான போக்குடைய நாடுகளைக் கட்டுப்படுத்த அந்நாட்டிலுள்ள அரசாங்கத்தின பலமான எதிரியை ஆதரிப்பதாகும். இதற்காக ஆயுத உதவியும் செய்யப்படுவதுமுண்டு. இதையே ஜே என். டிக்சிற் மீண்டும்பிரதிபலித்தார். அதாவது பிரேமதாசாவைக் கட்டுப்படுத்தபலத்தபலம் பொருந்திய புலிகள் தேவை என்பது அவரது நிலைப்பாடாகும்.

இந்நிலைப்பாடு இந்தியப் பிரதமர் நரசிம்மராவ்போன்ற நீண்டகாலஅரசியல்அனுபவம் பெற்ற அரசியல்வாதிகளினாலூட ஒரளவிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருந்திருப்பினும் அரசியல் அனுபவமற்ற அரசியல்வாதிகளால எழுப்பப்படும் ராஜீவ் கொலைபோன்ற உணர்ச்சி பூர்வமான பிரச்சினைகளாலும், குழப்பங்களாலும் விடுதலைபபுலிகளை தடை செய்யவேண்டிய நிலைக்கு இந்திய அரசாங்கம் வந்தது.

## புதிய நண்பர்களின் தேவை

இதன் காரணமாக இந்தியாவிற்கு பிரேமதாசா அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தக் கூடியசக்திஒன்று அவசியமாகத் தேவைப்பட்டது. இதனால் புதிய இராஜதந்திர அணுகுமுறை ஒன்றை வகுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது ஆனால் இந்தத் தேவை இந்தியாவிற்குதற்பொழுது உடனடியாகஏற்பட்டஒன்றாக இருக்கவில்லை. விடுதலைப்புலிகள் இந்திய இராணுவத்தையும், அவர்களுடன் இணைந்து நின்று போரிட்ட ஏனைய தமிழ்க் குழுக்களையும் தமிழர் பிரதேசத்தில் இருந்து விரட்டியதில் இருந்தே இதுதேவையாக இருந்தது. இதனால் இலங்கையில் புதிய நண்பர்களைத் தேடுவதில் 1990 இல் இருந்தே இந்தியா தீவிர கவனம் செலுத்தி வந்தது

ஆரம்பத்தில் இருந்து, விடுதலைபுலிகள் எவ்வாறு இந்தியாவிற்கு வேண்டப்படாத சக்தியாக இருந்தார்களோ அதே போன்ற சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவும் வேண்டப்படாத சக்தியாகவே இருந்தார். இந் நிலையில் விடுதலைப்புலிகளையும் சிறிலங்கா அரசாங்கத்தையும் சேர்த்து எதிர்க்கக் கூடிய சக்திகளே இந்தியாவிற்குத் தேவையாக இருந்தன.

இலங்கையைப் பொறுத்து இன்று இராணுவம், பௌத்த பீடம். அரசியல்வாதிகள் என்பன அரசியலில் முக்கிய பலம் பொருந்திய சக்திகளாகும். இதில். அரசியல்வாதிகளின் பலத்தை விட இராணுவத்தினதும், பௌத்த பீடங்களினதும் பலம் கணிசமான அளவில் உயர்ந்தே உள்ளது.

> இலங்கையில் தொடர்ந்தும் தனது பிடியை வைத்திருக்க சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தக் கூடியதும், விடுதலைப் புலிகளுடன் இழப்புக்களைப் பாராமல் தொடர்ந்து போரிடக் கூடியதுமான சக்தி ஒன்று இந்தியாவுக்கு அவசியமானதாக உள்ளது.

## பலவீனமான அரசியற் சக்திகள்

இப்பலம்பொருந்திய அரசியல் சக்திகளில் பிரேமதாசா அரசாங்கத்திற்கு முரண்பாடானவையேஇந்தியாவிற்குத்தேவையாக இருந்தன. அரசியல்வாதிகளில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து வந்துள்ள காமினி- லலித் குழுவினர் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமை தாங்கு சிறிமாவோ, அனுரா பண்டாரநயக்கா போன்றவர்களும் கொழும்பில்தங்கியுள்ள தமிழ்க் குழுக்களும் இந்தியாவிற்கு நேரடியாக ஆதரவு வழங்கக் கூடிய சக்திகளாக இருந்தன. ஆனால்இவ் அரசியல் வாதிகளின் பலமும் ஒற்றுமையும் நம்பிக்கை அளிப்பவையாக இல்லை. அதே வேளை தனியாக இவர்களைக் கொண்டு பிரேமதாசா அரசாங்கத்தின் செயற்பாடுகளையும் இந்திய விரோத நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்திவிடமுடியாது என்பதையும் இந்தியா புரிந்திருந்தது.

இருப்பினும்மேற்கூறப்பட்ட சக்திகளை இந்தியா புறம் தள்ளவில்லை. சிறிலங்கா ஜனாதிபதிக்கு அண்மைக்காலம் வரையும் ஒத்துழைப்பு நல்கிவந்த தமிழ் குழுக்களை தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமையில் அணிதிரட்ட இந்தியாமுற்பட்டுள்ளது. இதற்கு போதியநிதிஉதவி வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் தமிழ்க் குழுக்கள் தற்பொழுது சிறிலங்கா ஜனாதிபதிக்குஒத்துழைப்பதில் பின்னடிக்கத் தொடங்கியுள்ளன. பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் இறுதி அமர்வில தமிழ்க்குழுக்கள கலந்து கொள்வதில்லை எனத் தீர்மானம் நிறைவேற்றியதில் இருந்தே சிறிலங்கா ஜனாதிபதிகு தமது பூரண ஒத்துழைப்பை வழங்க அவை தயாராக இல்லை என்பதை வெளிக்காட்டின அதாவது பலமற்றவையாயினும் பெயரளவில இயங்கிய இத தமிழ்க் குழுக்களையும் இந்தியா பிரேமதாசா அரசிற்கு எதிராக மாற்றியுள்ளன.

இதேபோன்று பிரேமதாசா விரோத போககுடைய மேற்கூறிய சிங்கள அரசியல் கட்சிகளையும் அரசிற்கெதிரானநடவடிக்கைகளைத் தூண்டமுற்பட்டுள்ளது இவை ஒருபுறமிருக்க பிரேமதாசா அரசாங்கத்தின் போக்கை கட்டுப்படுத்த புதிய சக்திகளுடன் இந்தியா உறவை வளர்க்கவும் முற்பட்டுள்ளது.

## இராணுவம் இந்தியா நெருக்கம்

விடுதலைப் புலிகளுடன் நடந்து கொண்டிருந்த இரண்டாம் கட்டப் போரில் சிறிலங்கா இராணுவம் பெரும் இழப்புகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது தமிழர் படு கொலைகளைத் தவிர குறிப்பிட்ட ஒரு வெற்றியைத் தானும் ஈட்டமுடியாத நிலையில் சிறிலங்கா இராணுவம் குழப்பமடைந்துள்ளது ஆனால் இராணுவம் இக்கால பகுதியில் பெருமளவு பெருகியிருந்ததோடு, பெரும் இராணுவத்தளபாடங்களையும் குவித்தும் இருந்தது. இதன் காரணமாக அரசியலில்பெரும் சக்திபடைத்ததாகவும் அரசாங்கம் இராணுவத்தைப் புறந்தள்ளிவிட் ஆட்சி நடத்த முடியாத நிலையும் உருவாகியுள்ளது.

அத்தோடு இராணுவத்தில் கடும் போக்குடையவர்களின் கை வெகுவாக ஓங்கியுள்ளது. கடந்த இருமாதங்களுக்கு முன்னர் இராணுவ அமைப்பில்ஏற்படுத்தப்பட்ட மாற்றமானது இதனை வெளிக்காட்டியது. பிரேமதாசா அரசாங்கம் இதுவரை கடைப்பிடித்து வந்த இரட்டைத் தன்மையான அணுகுமுறையை - ஒருபுறம் போர் மறுபுறம் சமாதானப் பேச்சுகள்-இதுபலவீனப்படுத்தியுள்ளது இதன் மூலம் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை இராணுவம் தெளிவாக உணர்த்தியுள்ளது.

இதேவேளை, இராணுவம் தனித்து ஒரு முழுமையான வெற்றியை அடைந்துவிட முடியாது என்பதையும் உணர்ந்து கொண்டிருக்கிறது இந் நிலையில் ராஜீவ் காந்தி கொலையின் பின்னர் இந்தியாவின் போக்கில் ஏற்பட்ட மாற்றத்தை தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முயற்சித்தது இதைத் தொடர்ந்து இந்தியா - சிறிலங்கா இராணுவ ஒத்துழைப்பு ஓரளவு குறிப்பிடும்படியாக ஏற்படத் தொடங்கியது. குறிப்பாக வங்காளவிரிகுடாவிலும் பாக்கு நீரிணையிலும் இந்திய கடற்படை விடுதலைபுலிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதில தீவிர கவனம் செலுத்தின.

அத்தோடு சிறிலங்கா அரசியலில் வரலாற்றுரீதியாகவே பலம் பொருந்திய சக்தியாக இருந்துவரும் பௌத்த பீடங்களில் பலம் பொருந்திய சிலவும் தமிழரின் தேசிய இனப் போராட்டம் இராணுவ ரீதியில் அடக்கப்பட வேண்டும். என்ற தீவிர போக்கைக் கடைப்பிடிக்கின்றன. இதனால் பௌத்த கோட்பாடுகளையும் மறந்து போரில்ஈடுபடும் இராணுவத்திற்கு ஆசிவழங்க இராணுவ முகாம்களுக்கே செல்லுமளவிற்கு சில மகாநாயக்காகள் முன்வந்துள்ளார்கள். இதனால்கடும் போக்குடைய இராணுவத்தலைமைகளுக்கும்தீவிர போக்குடைய பௌத்தசங்கங்களுக்கும் இடையில் நெருக்கமான உறவு வளர்ந்தது

> சிறிலங்கா இராணுவத்திலுள்ள புலிகளுக்கு எதிரான கடும் கோட்பாட்டாளர்களும், தமிழ் தேசிய வாதத்திற்கு எதிரான பௌத்தபிக்குகளையும் இந்தியா தனது புதிய நேச சக்திகளாக ஆக்க முற்பட்டுள்ள அதேவேளை, பழைய நண்பர்களான தமிழ்க்குழுக்களுக்கு புத்துயிர்ப்பும், சிங்கள அரசியற் கட்சிகளுக்கு ஊக்கமும் அளிப்பதில் முற்பட்டுள்ளது.

## பலம்பொருந்தியபிக்குகள்- ராணுவகூட்டு

இவ்வாறு உருப்பெற்ற புதிய சக்தியானது அரசியலில் பலம் பொருந்தியதாக வளர்ந்து வந்தமையால் இந்திய அரசும் தனது புதிய ராஜதந்திர அணுகு முறையில் இவற்றிற்கு இடமளித்தது. பிரேமதாசா அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தும் பிரதான சக்தியாகக் காணப்பட்ட இச்சக்தியுடன் இந்தியரசும் உறவுகளை வளர்த்துக் கொள்ளமுற்பட்டது. இதேவேளை இராணுவ கடும் போக்காளர்களுடன் இணைந்து நின்ற பௌத்த குருமார்களும் இந்தியவுடன் இணைந்து செல்லபச்சைக் கொடி காட்டியுள்ளனர். ராஜீவ்காந்தி கொலை வழக்கு தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள தலைவர். பிரபாகரனையும் பொட்டுஅம்மானையும் பிடிப்பதற்கு இந்தியஇராணுவம் இலங்கைக்கு வர அனுமதிக்க வேண்டும் என்று சில பௌத்த குருமார்கள் கோரியதில இருந்தே இதனைப் புரிந்து கொள்ளலாம். அதாவது புலிகளுக்கு-தமிழ் தேசிய வாதத்திற்குஎதிராக-ஒரு சக்தி இந்தியாவுடன் ஒத்துழைக்கத் தயாராகவுள்ளது. அதுபிரேமதாசா அரசாங்கத்தை பலவீனப்படுத்தக் கூடியது என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

இந்நிலையில் இந்தியாவின் விருப்பதிற்கு ஏறப பிரேமதாசா அரசாங்கத்தை கட்டுப்படுத்தக் கூடியதும், அதே வேளை நாட்டைப் பற்றி எந்தவித அக்கறையும் கொள்ளாது விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தொடர்ந்து போரை மேற்க் கொள்ள கூடியதுமான ஒரு சக்தியாக இவ் இராணுவக்கடும் போக்காளரையும். தீவிர பௌத்த குருமாரையும் இந்தியா இனம் கண்டுள்ளது இவர்களுடன் உறவை வளர்ப்பதன் மூலம் பிரேமதாசா அரசாங்கம் மீது தனது பிடியை வைத்துக் கொள்வதற்கும். புலிகளை ஒடுக்குவதற்கும் இந்தியா எண்ணுகிறது

ஆனால் இந்தியாவின் புதிய அணுகுமுறை எந்தளவிற்கு வெற்றி பெறும் என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் பௌத்த சிங்களர்வர்கள் இந்தியாவை எப்பொழுதும் ஒரு நட்புச் சக்தியாகப் பார்த்தது கிடையாது. அத்தோடு, எந்த ஆபத்தான சூழ்நிலையாக இருந்தாலும் அதைப பொருட்படுத்தாது திரு. பிரேமதாசா தீவிரமான நடவடிக்கைகளுக்குச் செல்லக்கூடிய குணநலன் கொண்டவர் என்பது வெளிப்படை. இதனால், திரு. பிரேமதாசா மீதான இந்தியாவின் பிடி எந்தளவிற்கு இருக்கும் என்பது சர்ச்சைக்குரியதே. ஆனால் புதிய உறவின் மூலம், இந்தியாவின் பிடி பிரேமதாசா மீது இறுகுமானால் அது அவர் பதவி இறக்கப்படுவதோ அன்றி கவிழ்க்கப்படும் வரையிலோ சென்றாலும் ஆச்சரியப்பட ஏதுமில்லை

-ஜெயராஜ்

# ஜெயலலிதா அமைச்சரவை; வீரப்பன் நீக்கப்பட்டார்

தமிழ் நாட்டில் முதல்வர் ஜெயலலிதாவின் அமைச்சரவையிலிருந்து ஆர் எம். வீரப்பன் நீக்கப்பட்டுள்ளார். தமிழக முதல்வரின் ஆலோசனையின் பேரில் ஆர் எம் வீரப்பனிடமிருந்த பிற்பட்டோர் நலத்துறை அமைச்சுப் பொறுப்பு மீளப் பெறப்பட்டு மீன் வளத்துறை அமைச்சரான டி. ஜெயக்குமாரிடம் கையளிக்கப்படுவதாக சென்னை ஆளுநர் மாளிகை வட்டாரங்கள் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆர் எம் வீரப்பன், அமரர் எம் ஜி ஆர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்தகாலம் முதலே அவருடன் பணியாற்றியவர் என்பதும், எம் ஜி ஆர் அமைச்சரவையில் முக்கிய இடம் வகித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது ஜெயலலிதா அமைச்சரவையிலிருந்து ஏற்கவே ராசாராம், முகமது ஆசிப் ஆகியோரும் பதவி நீக்கப்பட்டது தெரிந்ததே.

# மீண்டும் அகதிகள் விமானம் மூலம்

(சென்னை)

இலங்கைத் தமிழ் அகதிகளை திருக்கோணமலைக்கு அனுப்பும் பணி ஜூன் இரண்டாம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கும் என்று அகதிகள் மறுவாழ்வுத் துறை இயக்குனர் ராமதாஸ் கூறியுள்ளார். வாரத்தில் ஆறு நாட்களுக்கும், தினமும் நாலு தடவை இவ்விமான சேவை நடத்தப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# திபெத் விவகாரம் சீனாவின் பிரச்சினை

## - இந்திய ஜனாதிபதி

(பீகிங்)

திபெத் விவகாரம் சீனாவின் உள்நாட்டு விவகாரம் என்றும் சீனாவிற்கு விஜயம் செய்த இந்திய குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமனிடம் சீனப் பிரதமர் லீ பெங் தெரிவித்ததாக சீன செய்தி தாபனமான சின்கோவா செய்தி வெளியிட்டு உள்ளது.

அச் செய்தியில் மேலும் இந்தியமண்ணிலிருந்துதிபெத்ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா செய்யும் நடவடிக்கைகளுக்கு இந்தியா அங்கீகாரம் வழங்கவில்லை என்று இந்திய குடியரசுத் தலைவர் வெங்கட்ராமன் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது

# புலிகளுக்கு எதிரான தடை அரசியல் நிர்ப்பந்தம் காரணம்

## திராவிடர் கழக வீரமணி

(சென்னை)

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடையானது அரசியல் நிர்ப்பந்தமும் அளவுக்கு மீறிய அச்ச உணர்வும் பெற்றெடுத்த அவசரக் குழந்தையாகும்.

இவ்வாறு திராவிடக்கழகப் பொதுச்செயலாளர் வீரமணி விடுதலைப் புலிகளுக்கு மத்திய அரசு விதித்த தடை தொடர்பாக விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் தடைவித்த மத்திய அரசானது ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைத்தடுத்து நிறுத்த பாதுகாப்பு வழங்க பரிகாரம்தேட என்னென்ன திட்டங்களை வைத்துள்ளது என்பது பற்றி அறிவிக்கவில்லை.

மேலும் தமிழீழம் என்ற தனிப் பிரகடனத்தை இலங்கையில் செய்து தனிக்கொடி ஏற்றிய வரதராஜப் பெருமாள் போன்ற போராளிக்குழுக்களை இங்கே விருந்தினர்களாக இந்திய அரசு வைத்து உபசரித்துக் கொண்டு விடுதலைப்புலிகளுக்கு மட்டும் தடை என்ற நடவடிக்கை, பாரபட்சமானதா? என்றும் குறிப்பிட்ட வீரமணி ஈழத்தமிழர்கள் அநாதைகள் ஆக்கப்படக்கூடாது 'காலம்' தெளிவான பதிலை இதற்கு அளிக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

# ராஜீவ் கொலை வழக்கு பிரசுரிக்க தடைவிதிப்பு

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை வழக்குக் குறித்த நீதிமன்ற நடவடிக்கைகளை பிரசுரிப்பதைத் தடைசெய்து இந்த வழக்கை விசாரித்து வரும் தனி நீதிமன்றத்தின் நீதிபதி எஸ். எம். சித்திக் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சிறப்புப் புலனாய்வுக் குழு நீதிமன்றத்தில் தாக்கல்செய்த மனுவின் மீது நேற்று முன்தினம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நீதிமன்ற நடவடிக்கைகளினால் சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்கள் மற்றும் சாட்சிகள் போன்ற எவரும் பத்திரிகைகளுக்கோ வேறு அனுமதி பெறாத எவருக்கோ தகவல் வழங்கக் கூடாது என்று அந்த உத்தரவு கூறுகிறது.

இந்த உத்தரவை மீறினால் ஓராண்டுச் சிறைத் தண்டனையும், ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்படும் என்று இந்த உத்தரவு தெரிவிக்கிறது.

ராஜீவ்காந்தி கொலை வழக்குத் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளைப் பகுதியாகவோ முழுமையாகவோ அல்லது எந்த வகையிலும் பிரசுரிக்கக் கூடாது என்றும் இந்த உத்தரவு கூறுகிறது.

# இனந்தெரியா விமானங்கள் யாழ்.பகுதியில் நடமாட்டம்

(யாழ்ப்பாணம்)

நேற்று பகல் 11.00 மணியளவில் யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளையும் இனந்தெரியாத யுத்த விமானங்களின் ஓர் தொகுதிபேரிரைச்சலுடன் தாழப்பறந்து நோட்டமிட்டவாறு சென்றதை காணக்கூடியதாக இருந்தது.

11.15 மணியளவில் யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளை நோட்டமிட்டவாறு ஒருபெரிய யுத்த விமானத்தின் இருமருங்கிலும் இரு சிறிய யுத்த விமானங்கள் நிரையாக சென்றதை அவதானிக்க முடிந்தது இவ் யுத்தவிமானங்களின் நடமாட்டம் குறித்து மக்கள் மத்தியில் பயப் பீதிகாணப்பட்டது.(பா)

# எதிரணி பத்திரிகை ஆசிரியர் பொலிசாரால் விசாரணை

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உத்தியோகபூர்வ பத்திரிகையான 'ராஜாலிய' பத்திரிகையின் ஆசிரிய பீட அலுவலர்களை விசாரணைக்கு உட்படுத்துவது மேற்படி முன்னணிக்கு மட்டுமல்ல சுதந்திரமாக அபிப்பிராயங்களை வெளியிடும் சகல செய்திப் பத்திரிகைகளுக்கும் பிரசுரங்களுக்கும் ஓர் அச்சுறுத்தலாகும் என்று லலித் அத்துலத்முதலியும், காமினி திஸாநாயக்காவும் கூறியுள்ளனர்.

பத்திராதிபர் பிரேம் லந்த வெல மற்றும் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த இருவரையும் இரகசியப் பொலிஸ் அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தியது தொடர்பாகவே இவர்கள்இக்கருத்தைதெரிவித்தனர்

எதிரணி அரசியல் கட்சிகளையும் அமைப்புக்களையும் நசுக்குவதற்கு இரகசியப் பொலிசார் பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள் இது ஜனநாயக நாடுகளில் நடைபெறுவதில்லை.

எதிரணி அரசியல் தலைவர்களுக்கு எதிராக அற்பத்தனமான வழக்குகளைத் தாக்கல் செய்து அதற்குரிய சான்றுகளைச் சோடிக்க இரகசியப் பொலிசாரைப் பயன்படுத்துவது வழக்கமாகி விட்டது.

இரகசியப் பொலிசாருக்கு இதைவிட பாரிய பொறுப்புண்டு. மர்மமான இரகசிய குற்ற நடவடிக்கைகளைக் கண்டுபிடிக்க இவர்களை ஈடுபடுத்த வேண்டும். அரசியல் எதிரிகளை நசுக்க அல்ல எனவும் தெரிவித்தார்.

மேலும் இரகசியப் பொலிசாரினால் பன்னலயில் எமது கூட்டத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்திற்குப் பொறுப்பானவர்களைக் கண்டு பிடிக்க முடியாமல் இருப்பதும் ஏன் எனவும் கேள்வி எழுப்பினார்

### கடுமையான

கம் கருதவில்லை என சிறிலங்கா பிரதமர் டி. பி. விஜயதுங்கா நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளை இந்திய அரசாங்கம் தடைசெய்ததால் எழுந்துள்ள நிலைபற்றி சிறிலங்கா பாராளுமன்றத்தில் வெளியிட்ட அறிக்கையொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், புலிகளிடன் பேச்சுவார்த்தை நடாத்தாது வட-கிழக்குப் பிரச்சினைக்குத்தீர்வு காணமுடியாது என முன்னர் சிறிமாவோபண்டாரநாயக்கா தெரிவித்ததையும்சுட்டிக்காட்டிய அவர், இராணுவத்தீர்வு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண தாம் விரும்பவில்லை எனவும் தெரிவித்தார்.

### சார்க்

ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

விசாரணைக்காக ஒருவரை நாடுகடத்தி அனுப்புவது என்பது அடிப்படையில் ஒரு நீதிமன்ற நடவடிக்கை என்று வாஷிங்டனில் செய்தியாளர் கூட்டத்தில் பேசும் போது அவர்தெரிவித்தார்.இத்தகைய பணியை இந்தியா இன்னும் தொடங்கவில்லை என்றும் ரணில் விக்கிரமசிங்கா சுட்டிக்காட்டினார்.

## நினைவுக் கூட்டம்

முன்னாள் மன்னார் மாவட்டத் தளபதியும், யாழ் மாவட்டத் தளபதியுமாகிய லெப் கேணல் ராதா அவர்களின் 5ஆம்ஆண்டு நினைவுதினமும், முள்ளிக்குளத்தில் புளொட் தேச விரோதிகளின் முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவு அடைந்த பூனரியைச்சேர்ந்த கப்டன் குலம். கருணன் உட்பட வீரச்சாவு அடைந்த 11 போராளிகளின் நினைவுதினக் கூட்டமும் 26-05-92 அன்று பி. ப, 4-00 மணி அளவில் பூனகரி நல்லூர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்திலும், பூனகரி சாமிக்குளம் அரசினர் தமிழக் கலவன் பாடசாலை மண்டபத்திலும், பூனகரி நல்லூர் அரசியல் பொறுப்பாளர் திரு, மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இவ் நினைவு தினக் கூட்டத்தில்பாடசாலை மாணவர்கள் உட்பட பெருந்தொகையான மக்களும் கலந்து கொண்டனர். நினைவு தினக் கூட்டத்தில் பாடசாலை அதிபர் திரு, பொன். தில்லைநாதன் அவர்களும் ஆசிரியர் உட்பட பலர் உரை ஆற்றினார்கள்.

### இனப்பிரச்சினை

வுட செனிவிரத்ன தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; வடக்கிலும் கிழக்கிலும் இன்று யுத்தம் நடைபெறுகின்றது. இந்நிலை இந்நாட்டிற்கு வந்துவிடக் கூடாது என்பதற்காக 30 வருடங்களுக்கு முன்னர் எமது தலைவர்கள்கூறிய வார்த்தைகளை ஆட்சியாளர்கள் செவிமடுக்கவில்லை. ஆனால் இன்று ஆயிரக்கணக்கானோர் செத்துமடியும் நிலையும் நாடு துயரத்திற்குள்ளாகி இருக்கும்நிலையுமே தோன்றியுள்ளது.

ஜனாதிபதி ஆட்சிக்குவந்து 3½ வருடங்கள் ஆகின்றன. சர்வகட்சி மாநாடு நடந்ததே தவிர பிரச்சினை தீரவில்லை.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவில் இன்னும் ஐக்கியதேசியக்கட்சி தீர்வினை முன்வைக்கவில்லை; இதனால் இன்னும் எத்தனை வருடங்களுக்கு இத்துயரச் சம்பவங்கள் நீடிக்குமோ தெரியாது எனவும் தெரிவித்தார்.

## நினைவூட்டுகிறோம்

மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட நிரந்தர போக்கு வரத்து அனுமதி அட்டைகள்யாவும் இம்மாதம் 31 ஆம் திகதி வரையுமே செல்லுபடியாகும். மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள போக்குவரத்து அனுமதி வழங்கும் காரியாலயத்தை நாடவும். [சி-4421]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992ஆம் ஆண்டு மேமாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தமிழ் நாட்டில் தமிழகதிகள் கடும் துன்பம்

(லண்டன்)

ராஜீவ்காந்தி கொலைக்குப் பிறகு தமிழ் நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் துயரத்துக்கும் துன்பத்துக்கும் ஆளாகியுள்ளார்கள் எனச் சென்னையிலுள்ள மனித உரிமை அமைப்புக்களை மேற்கோள் காட்டி பி.பி.ஸி. தெரிவித்தது.

தமிழகத்தில் இப்போது இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியிருக்கிறார்கள் அகதிகளின் குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களில் சேர்க்க வேண்டாம் என்று தமிழக அரசு ஆணைபிறப்பித்துள்ளது அகதி முகாம்களுக்குக்குடிநீரும்மருத்துவ வசதிகளும் அடிக்கடி தடைப்பட்டுப் போகின்றன என்று உதவி வழங்கும் ஊழியர்கள் கூறுகிறார்கள்.

விடுதலைப்புலிகளின்செயற்பாட்டைக் கட்டுப்படுத்துவதனால் எல்லா அகதிகளையும் திருப்பி அனுப்புவதைத் தவிர வேறு வழியில்லை என்று உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் கூறியதாக தகவல்கள் வெளியாகின எனவும் பி பி.ஸி. மேலும் தெரிவித்தது.

# அகலவத்த பகுதியில் தமிழ் மக்கள் விரட்டியடிப்பு

அகலவத்தை பகுதியைச் சேர்ந்த பெலவத்த அரச தோட்டத்தில் வசித்து வந்த சுமார் மூப்பது தமிழ்க் குடும்பங்கள் கடந்த வாரம் அங்கிருந்து தாக்கி விரட்டியடிக்கப் பட்டதாக தெரிவிக்கப் படுகிறது.

தோட்ட உத்தியோகத்தர் ஒருவரின் மனைவி கொலையுண்டதை அடுத்துஇச் செய்தி அயல் கிராமங்களுக்கு பரவியதை அடுத்து அங்கிருந்து திரண்டு வந்த கோஷ்டியினரே பெலவத்த தோட்ட குடியிருப்புகளில் வாழ்ந்ததமிழர்களை தாக்கியதுடன் அக் குடியிருப்பில் வாழ்ந்த பெண்கள் குழந்தைகள் உட்பட பலர் பலமாகத் தாக்கப்பட்டனர்.

இது தொடர்பக ராஜாங்க அமைச்சர் எம். எஸ் செல்லச்சாமியிடம் புகார் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவர் இதை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்காவின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

இச்சம்பவத்தின் போது இளம் பெண்கள் இம்சைக்கு உள்ளாக்கப் பட்டதாகவும் தாக்கப்பட்டமக்கள் தமது புகாரில் தெரிவித்துள்ளனர்,

### மடுல்சீமையில்

# யாழ். இல் தொழில் புரிந்த மலையக இளைஞர் கைது

யாழ்ப்பாணத்தில் தொழில் செய்துவிட்டு தற்போது யாழ். நெருக்கடி நிமித்தம் தமது சொந்த ஊர் திரும்பிய மலையக இளைஞர்கள் நால்வர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆர். மகேந்திரன், கே. கோவிந்தராஜ் பி. நடராஜா, பேரின்பநாதன் ஆகி மேற்படி நான்கு இளைஞர்களும் தமது சொந்த ஊரான மடுல்சீமையைச் சேர்ந்தவுடன் அங்குள்ளவர்களின் ஆலோசனையின் பிரகாரம் தாம் சொந்த இடம் திரும்பியது பற்றி அறிவிப்பதற்கு பொலிஸ் நிலையம் சென்ற சமயமே பொலிசார் அவர்களைக் கைது செய்துள்ளனர் என இ தொ. கா. பதுளை மாவட்ட பிரதிநிதி எம். சண்முகம் தெரிவித்தார்.

இவர்கள் தற்போது பதுளை பொலிஸ் நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

## இன்று பரிசளிப்பு

இவ்வாண்டுக்கான அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வில் வலிகாம பிரிவில் உயர்சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில்கள் இன்று இரவு 7.30மணிக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் மாவட்ட செயலக மாவீரகலையரங்கில் நடைபெறவுள்ள கூட்டத்தின்போது வழங்கப்பட உள்ளது என்று விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க வலிகாம பிரிவினர் அறிவித்துள்ளனர்.

### விடியலின்

புலிகள்மகளிர்முன்னணி,விடுதலைப்புலிகள் மகளிர்முன்னணி யாழ். மாவட்ட பொறுப்பாளர் செல்வி ஆர்த்தி, யாழ். மாவட்ட கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் சிட்டு ஆகியோரும் கலந்துகொள்கின்றனர். இந்த ஒலிப்பதிவு நாடாவின் வெளியீட்டு உரையை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்களும், சிறப்புரைகளை செ. வேலாயுதம் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்) சோ. பத்மநாதன் (சிரேஷ்ட விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை) ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

தமிழீழ மக்கள் அனைவரையும் இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

## பயணிகள் பதிவு செய்துகொள்ளவும்

வடமராட்சியிலிருந்து கொம்படியூடாகச் செல்லும் பயணிகள் யாவரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை முதல் வடமராட்சி போக்குவரத்து ஒன்றிய அலுவலகத்தில் ஆசனப்பதிவு செய்த பின்பே தமது பயணத்தை மேற்கொள்ள முடியும் என வடமராட்சி போக்குவரத்து ஒன்றியம் அறிவித்துள்ளது.

பதிவு செய்யத்தவறும் பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்க்குமுகமாக இந்த நடைமுறையை கவனத்தில் கொள்ளுமாறு வடமராட்சிப் பிரதேசப் பயணிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். (பா)

## விபுலானந்தர் நூற்றாண்டுவிழா

விபுலானந்தஅடிகளின் நூற்றாண்டுவிழாவும் புத்தகக் கண்காட்சியும் எதிர்வரும் 24, 25, 26 ஆம் திகதிகளில் நல்லூர் நாவலர் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இந்த நூற்றாண்டு விழாவையும் யாழ் மாநகரசபை ஏற்பாடு செய்திருக்கிறது.

ஆரம்பநாளான ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு விழா அங்குரார்ப்பண வைபவமும் விபுலானந்த அடிகளின் உருவப்பட திரைநீக்கமும் இடம்பெறும். யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் தலைமையில் நிகழ்ச்சிகள் இடம்பெறும்

மூன்றுதினங்களும் பல்வேறு பிரமுகர்களதுசிறப்புரைகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவிருக்கிறது.

### வீரச்சாவு

வீரவேங்கை தங்கநேசன் (ஆனந் - சிதம்பரப்பிள்ளை சுந்தரலிங்கம்,வாழைச்சேனை மட்டக்களப்பு) ஆகிய இருவருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.